Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை ரூபா 10.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர்:04 திருவள்ளுவர் ஆண்டு: 2037 மாசி 28 ஹிஜ்ரி 1426 ஸபர் 11 (12.03.2006) ஞாயிற்றுக்கிழமை இதழ் 162




# உயர்பாதுகாப்பு வலயங்களை அகற்ற திட்டவட்டமாக மறுக்கிறது அரசாங்கம்!

## பாதுகாப்பு அதிகாரிகளின் இறுக்கமே காரணம்

கொழும்பு—

யாழ். குடாநாட்டில் உள்ள உயர் பாதுகாப்பு வலயங்களை அகற்றுவதில்லையென இலங்கை அரசாங்கம் முடிவு செய்திருப்பதாக தெரியவருகிறது.

பாதுகாப்பு அதிகாரிகள் இந்த விடயத்தில் இறுக்கமான போக்கை கடைப்பிடிப்பதாகவும் பதுகாப்பு வலயங்களை அகற்றுமாறு புலிகள் கோருகின்ற நிலையில் இதற்கு திட்டவட்டமாக மறுப்புத்தெரிவிக்குமாறும் ஜனாதிபதி மகிந்தவுக்கு கூறியிருப்பதாகவும் தெரியவருகிறது.

அடுத்த சுற்றுப் பேச்சுவார்த்தையில் உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பாகவே பேசப்படுமென விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர். ஆனால் உயர் பாதுகாப்பு வலயப் பகுதிகளுக்கு அண்மையாகவுள்ள விடுதலைப் புலிகளின் நவீன ஆயுதங்கள் அகற்றப்படும் வரை உயர் பாதுகாப்பு வலயத்தின் எல்லைகளை தளர்த்தக் கூடாதென படை அதிகாரிகள் தேசிய பாதுகாப்பு சபைக்கும், (12 ஆம் பக்கம் பார்க்க)

## வாகரை-கட்டுமுறிவில் புலிகளின் நிலை மீது தாக்குதல்!

மட்டக்களப்பு—

மட்டக்களப்பு மாவட்டத்தில் வாகரை-கட்டுமுறிவில் விடுதலைப்புலிகளின் காவல் நிலை ஒன்றின் மீது இராணுவத்தினரும், துணை ஆயுதக்குழுவினரும் இணைந்து மேற்கொண்ட தாக்குதல் முயற்சி முறியடிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் இரவு 9.30 மணியளவில் இடம்பெற்ற இந்தத் தாக்குதலில் சுமார் (12 ஆம் பக்கம் பார்க்க)

**நாளைய இதழில் உள்ளே ⇨**

க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்காக - ஆசிரியர் கமல் தயாரித்த அளவையியல் மாதிரி வினாத் தாள் வெளிவருகிறது.

உங்கள் பிரதிக்கு முந்துங்கள்

## ஈ.பி.டி.பி, புளொட், கருணா குழு ஆகியன ஆயுதக் குழுக்களாகச் செயற்படுகின்றன!

### அமெரிக்கா குற்றச்சாட்டு

கொழும்பு—

ஈ.பி.டி.பி, புளொட், கருணா குழு ஆகியன இலங்கை அரசாங்கத்தின் துணை ஆயுதக் குழுக்களாகச் செயற்படுவதாகவும் - இவர்களால் பெருமளவில் மனித உரிமைகள் மீறப்படுவதாகவும் அமெரிக்கா விசனம் தெரிவித்துள்ளது.

2005 ஆம் ஆண்டு இலங்கை மனித உரிமைகள் தொடர்பாக அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

அரசாங்கத்துடன் இணைந்துள்ளதாக சந்தேகிக்கப்படும் துணை இராணுவக் குழுக்கள், அரசியல் எதிரிகள் மீது தொடர்ந்து தாக்குதல்களை நடத்தி வருகின்றன.

மேலும் ஈ.பி.டி.பி புளொட் மற்றும் கருணா குழு ஆகியவை அரசாங்கத்துடன் இணைந்து

திரவதைகளும், கொலைகளும் நடைபெறுவதை மிகக் கடுமையாக அமெரிக்கா கண்டித்துள்ளது.

கடந்த ஆண்டில் 25பொலிஸ் நிலைய மரணங்கள் நிகழ்ந்துள்ளதாகவும் - இவற்றில் பொலிஸார் காவலில் (12 ஆம் பக்கம் பார்க்க)

## திடீரென இறந்த காகங்கள்; பூநகரி பகுதியில் பரபரப்பு!

கிளிநொச்சி—

பூநகரி மகாவித்தியாலய மைதானம் மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் பல காகங்கள் திடீர் திடீரென இறந்ததையடுத்து அந்தப் பகுதியில் கடந்த புதன்கிழமை பெரும் பரபரப்பு நிலவியது.

இதனையடுத்து அந்தப்பகுதி மக்கள்- தமிழீழ சுகாதார சேவையினருக்கு தெரியப்படுத்தியதையடுத்து, சம்பவ இடத்துக்கு பூநகரி கால்நடை வைத்திய அதிகாரியுடன் சென்று விசாரணையை (12 ஆம் பக்கம் பார்க்க)

### ஜெனிவா பேச்சு குறித்து விளக்க

## அமைச்சர் நிமால் இந்தியா செல்கிறார்

கொழும்பு—

ஜெனிவாவில் விடுதலைப் புலிகளுடன் நடைபெற்ற முதல் சுற்றுப் பேச்சுக்களிலும் அடுத்த மாதம் நடைபெறவுள்ள இரண்டாம் சுற்றுப் பேச்சுக்களினதும் விபரங்களை இந்திய அரசுக்கு தெரிவிப்பதற்காக அரச பிரதிநிதிகள் குழுவொன்றை இந்தியாவுக்கு அனுப்ப ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தீர்மானித்துள்ளார்.

இதன்படி ஜெனிவாவில் நடைபெற்ற பேச்சில் அரச பிரதிநிதிகள் குழுவுக்கு தலைமை

## செக். பாதுகாப்பு ஆலோசகர் கடற்படைத் தளபதியுடன் சந்திப்பு!

கொழும்பு—

செக். குடியரச்ஸ் பாதுகாப்பு ஆலோசகர், கடற்படைத்தளபதி வைஸ் அட்மிரல் வசந்த கரன்னகொடவைச் சந்தித்து பேச்சு நடத்தினார்.



சுக்கு தெரிவிப்பதற்காக அரச பிரதிநிதிகள் குழுவொன்றை இந்தியாவுக்கு அனுப்ப ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தீர்மானித்துள்ளார்.

இதன்படி ஜெனிவாவில் நடைபெற்ற பேச்சில் அரச பிரதிநிதிகள் குழுவுக்கு தலைமை வகித்த அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா அடுத்து வரும் சில தினங்களில் இந்தியாவுக்கு செல்லவுள்ளார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

அரசாங்கத்துடன் இணைந்துள்ளதாக சந்தேகிக்கப்படும் துணை இராணுவக் குழுக்கள், அரசியல் எதிரிகள் மீது தொடர்ந்து தாக்குதல்களை நடத்தி வருகின்றன.

மேலும் ஈ.பி.டி.பி புளொட் மற்றும் கருணா குழு ஆகியவை அரசாங்கத்துடன் இணைந்து துணைஆயுதக்குழுக்களாக இயங்கி வருகின்றன. இந்த துணை ஆயுதக்குழுவினர் பெருமளவு படுகொலைகளை மேற்கொண்டு வருகின்றனர். அத்துடன், பொலிஸ் நிலையங்களில் சித்



கொழும்பு


செக்.குடியரசின் பாதுகாப்பு ஆலோசகர், கடற்படைத்தளபதி வைஸ் அட்மிரல் வசந்த கரன்னகொடவைச் சந்தித்து பேச்சு நடத்தினார்.

கடந்த 7 ஆம் திகதி காலை கடற்படைத் தலைமையகத்தில் இந்தச் சந்திப்பு இடம் பெற்றது. பாதுகாப்பு நிலவரங்கள் மற்றும் செக். குடியரசின் ஆயுத தளபாட உதவிகள் தொடர்பாகவும் இந்தப் பேச்சுக்களில் முக்கிய கவனமெடுக்கப்பட்டது.

கேணல் ஜிற்றிக் ஹக்கர் என்ற இந்த செக்.குடியரசு (12 ஆம் பக்கம் பார்க்க)

# ஜெனிவா கூட்டறிக்கைக்கு ஆதரவு தெரிவிக்கவில்லை

## ரில்வின் சில்வாவுக்கு வீரவன்ச விளக்கம்





கொழும்பு

அரசு மற்றும் விடுதலைப் புலிகள் இணைந்து ஜெனிவாவில் வெளியிட்ட கூட்டறிக்கைக்கு அலரி மாளிகையிலிருந்து தனது ஆதரவை வெளியிடவில்லை எனவும், இந்த அறிக்கை தொடர்பாக வெளியிடப்பட்ட எந்தவொரு கலந்துரையாடலிலும் பங்குகொள்ளவில்லையெனவும், ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச - கட்சியின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வாவுக்கு தெரிவித்தார்.

கட்சியின் மத்திய செயற்குழு மற்றும் நிறைவேற்று சபையின் அனுமதியின்றி ஜெனிவாவில் வெளியிடப்பட்ட கூட்டறிக்கைக்கு ஆதரவு தெரிவித்தது ஏன் என்ற காரணத்தைத் தெரிவிக்குமாறு ஜே.வி.பி கடந்த வாரம் விமல் வீரவன்சவிடம் கோரியிருந்தது.

இதன்படி கட்சியின் மத்திய செயற்குழுவுக்கும், நிறைவேற்று சபைக்கும் முரணாக கூட்டறிக்கைக்கு ஆதரவு தெரிவிக்கவில்லையெனவும், அது தன்மீதான (12 ஆம் பக்கம் பார்க்க)

# அனுசரணைப் பணியில் தொடர்வதா? அரசிடம் கோருவதற்கு நோர்வே முடிவு

கொழும்பு

சமாதான முயற்சிகளில் தொடர்ந்தும் அனுசரணைப் பணியை வகிக்க வேண்டுமா அல்லது அதிலிருந்து விலகிக்கொள்வதா என்பது குறித்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் கோருவதற்கு நோர்வே அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக கொழும்பிலிருந்து வெளிவரும் சிங்கள நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பதவியைப் பொறுப்பேற்ற பின்னர், நோர்வே அரசாங்கம் இது குறித்து அவரிடம் கேட்டிருந்தது. ஜெனிவாவில் பேச்சு நடத்துவது குறித்து நோர்வே தயாரிப்பு பணிகளை மேற்கொண்டது - அவர்களது அனுசரணைப் பணியின் பெறுமதியை இலங்கை அரசாங்கம் வெளியிட்டதன் பின்னரேயாகும்.

இதன்படி மீண்டும் அந்த நிலைப்பாட்டை ஜனாதிபதியிடம் கேட்பதற்கு நோர்வே அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

சமாதான முயற்சிகளில் தொடர்ந்தும் அனுசரணைப் பணியை வகிக்குமாறு ஜனாதிபதி ராஜபக்ஷ நோர்வேயிடம் தெரிவித்தால், அது அரசுக்கு ஆதரவளித்துவரும் ஜே.வி.பி மீது தொடுக்கப்படும் தாக்குதலாக அமையுமென அரசியல் விமாசகர்கள் கருதுகின்றனர்.

எவ்வாறாயினும், ஐக்கிய தேசிய முன்னணி அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஏற்படுத்தப்பட்ட போர்நிறுத்த உடன்படிக்கையைத் தொடர்ந்து பாதுகாக்கவும், அதனை செயற்படுத்துவதற்கும் அரசு தீர்மானித்துள்ளதாகவும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(தே)

APC ஆனந்தா பிறைவேற் கிளினிக்
எமது சேவைகள் 1.வீடுகளுக்குச் சென்று நோயாளிகளைப் பார்வையிடல் 2. பெண் நோயாளர்கள் பெண் வைத்தியரிடம் ஆலோசனை பெறும் வசதி (தினமும் மாலை)
(C/4385) 173, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021-222 8144
ஆலோசனை நேரம்:
திங்கள் முதல் சனி காலை 6.00 முதல் இரவு 9.00 வரை
ஞாயிறு காலை 6.00 முதல் காலை 10.00 வரை
மாலை 5.00 முதல் இரவு 9.00 வரை


# பணத்துடன் தலைமறைவான சாரதி கட்டுகஸ்த பொலிஸாரிடம் பிடிபட்டார்

யாழ்ப்பாணம் —

யாழ்ப்பாணத்தில் தனியார் போக்குவரத்து சேவையில் ஈடுபட்டிருக்கும் ஈஸ்வரன் ட்ரேடர்ஸுக்குச் சொந்தமான இரண்டு லட்சம் ருபாவுடன் தலைமறைவான சிங்களவரான சாரதி கட்டுகஸ்த பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

கடந்த முதலாம் திகதி ஓமந்தையிலுள்ள விடுதலைப் புலிகளின் அலுவலகத்தில் ஒப்படைப்பதற்காக இரண்டு லட்சம் ருபாவை இந்தச் சாரதி யாழ்ப்பாணத்திலிருந்து எடுத்துச்சென்றிருந்தார்.

குறித்த இரண்டு இலட்சம் ரூபா பணத்தினை முகமாலை சோதனைச் சாவடியில் கொடுக்காது, தடைமுகாமைத்தாண்டிச் சென்று தலைமறைவானார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக தகவல் அளித்த குறித்த நிறுவன உரிமையாளர் யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.

கண்டி பொல்கல்ல என்ற இடத்தில் குறித்த சாரதி தங்கியிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

இதனையடுத்து கட்டுகஸ்த பொலிஸாரின் உதவியுடன் பிரஸ்தாப நபர் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டு, இரத்மலானை விமான நிலைய பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

கைது செய்யப்பட்ட மேற்படி நபர் இன்று விமானம் மூலம் யாழ்பாணத்துக்கு கொண்டு வரப்பட்டு யாழ்.பொலிஸாரிடம் ஒப்படைக்கப்படவுள்ளார்.

# வலைப்பந்தாட்ட மத்தியஸ்தர்களுக்கு கிளிநொச்சியில் செய்முறைப் பரீட்சை

யாழ்ப்பாணம் —

யாழ்.மாவட்ட வலைப்பந்தாட்டச் சங்கத்தின் அனுசரணையுடன் இலங்கை வலைப்பந்தாட்டச் சங்கத்தால் நடத்தப்பட்ட வலைப்பந்தாட்ட மத்தியஸ்தர்களுக்கான எழுத்துப் பரீட்சையில் 88 பேர் சீ தரத்தில் சித்தியடைந்துள்ளனர்.

இவர்களுக்கான செய்முறைப் பரீட்சை எதிர்வரும் 18 ஆம், 19 ஆம் திகதிகளில் கிளிநொச்சி சென்.திரேசா மகளிர் கல்லூரியில் காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்தச் செய்முறைப் பரீட்சைக்கு தோற்றவுள்ளவர்களுக்கான நேர்முகக் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதென்றும், கடிதங்கள் கிடைக்கப் பெற்றதும் அதனை உறுதி செய்வதற்காக தமது தேசிய அடையாள அட்டையுடன் யாழ். மாவட்ட வலைப்பந்தாட்டச் சங்கத் தலைவர் திருமதி ஜெ.எவ். ரூபசிங்கத்திடமோ அல்லது செயலாளர் திருமதி ஜெ.சரவணபவஐயரிடமோ சென்று உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

மேலும் இவர்களுக்கான ஆலோசனையும், வழிகாட்டல் கருத்தரங்கும் யாழ்.வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலையில் எதிர்வரும் 16 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு வலைப்பந்தாட்டச் சங்கத் தலைவர் ஜே.எவ்.ரூபசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளதால் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (12)

# சின்னஞ்சிறு செய்திகள்

## கைவிடப்பட்ட நிலையில் மோட்டார் சைக்கிள் மீட்பு

யாழ்ப்பாணம் —

யாழ்ப்பாணத்தில் இயங்கும் அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றுக்குச் சொந்தமானதென கருதப்படும் புதிய மோட்டார் சைக்கிள் ஒன்று நேற்று அதிகாலை நாயன்மார்கட்டு அரசடிப் பிள்ளையார் கோவிலடியில் மீட்கப்பட்டது.

வேல்ட் விசன் என்ற நிறுவனத்துக்கு சொந்தமானது என அறியப்பட்ட இந்த மோட்டார் சைக்கிள் சில தினங்களுக்கு முன்னர் காணாமல் போனதாகக் கூறப்பட்டது. யாழ்.பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸார் காலை 10 மணியளவில் விசாரணை களை மேற்கொண்ட பின்னர் குறித்த மோட்டார் சைக்கிளை பொலிஸ் நிலையத்துக்கு எடுத்துச் சென்றனர். (110)

## கலந்துரையாடல்

கோப்பாய் —

கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின் எதிர்கால அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் இன்று பிற்பகல் 3 மணிக்கு கல்லூரி நினைவு மண்டபத்தில் அதிபர் திரு அ.அகிலதாஸ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் பெற்றோர்கள், பழைய மாணவர்கள், மற்றும் நலன்விரும்பிகள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு அதிபர் கேட்டுள்ளார். (100)

## வணிக பீட பரீட்சை

மானிப்பாய் —

யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடத்தின் கல்வியாண்டு 2004/2005 இற்கான இரண்டாம் அரையாண்டு பரீட்சைகளுக்கான விண்ணப்... கள் கோரப்பட்டுள்ளன.

எனவே நாளை தொடக்கம் பீடாதிபதி அலுவலகத்தில் விண்ணப்பங்கள்ளப் பெற்று எதிர்வரும் 30 திகதிக்கு முன்னர் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் மேற்படி பீடத்திலேயே ஒப்படைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (100)

## இன்றைய கிரிக்கெட் போட்டி

யாழ்ப்பாணம் —

வடக்கின் மாபெரும் கிரிக்கெட் போட்டி என வர்ணிக்கப்படும் யாழ். மத்திய கல்லூரிக்கும், சென். ஜோன்ஸ் கல்லூரிக்கும் இடையிலான மாபெரும் போட்டியைத் தொடர்ந்து இரு கல்லூரி பழைய மாணவர்களுக்கும் இடையிலான வருடாந்த 50 ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட கிரிக்கெட் போட்டி இன்று யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டி இன்று காலை 9.30 மணி முதல் நடைபெறுவதற்கான ஒழுங்குகளை யாழ்.மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கத்தினர் மேற்கொண்டுள்ளனர். (58)

## இலவச மருத்துவ முகாம்

வேலணை —

தீவக அரிமாக் கழகம் நடத்தும் இலவச மருத்துவ முகாம் இன்று காலை 9 மணிக்கு சரவணை நாகேஸ்வரி மகா வித்தியாலத்தில் நடைபெறவுள்ளது.

தீவக அரிமாக் கழகத் தலைவர் எஸ்.நித்தியானந்தன் தலைமையில் நடைபெறும். இந்த நிகழ்வில் வலயம் 3 இன் தலைவர் ரி.அன்பானந்தன் பிரதம விருந்தினராக கலந்துகொள்வார்.

இந்த நிகழ்வில் நோயாளிகள் பரிசோதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்படும். இது தொடர்பான கருத்தரங்கும் இடம்பெறவுள்ளது. அத்துடன், மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள், நுளம்பு வலைகள், ஊனமுற்றோருக்கான முச்சக்கரவண்டி என்பனவும் வழங்கப்படவுள்ளன.

மேற்படி நிகழ்வில் தீவக மக்களை கலந்து கொண்டு பயன்பெறுமாறு அரிமாக் கழகம் தெரிவித்துள்ளது.

## கிரிக்கெட் பயிற்சி முகாம்

யாழ்ப்பாணம் —

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் கிரிக்கெட்டை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் யாழ். நகரில் உள்ள 22 வயதுக்குட்பட்ட கழக கிரிக்கெட் வீரர்களுக்கும், பாடசாலை 19 வயதுக்குட்பட்ட வீரர்களில் சிறந்த பந்துவீச்சாளர்களையும், தெரிவு செய்து பயிற்சி அளிப்பதற்கான பயிற்சி முகாம் ஒன்று இன்றும், நாளையும் சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் காலை 10 மணிமுதல் நடைபெறவுள்ளது.

இந்தப் பயிற்சி முகாமுக்கு வேண்டிய ஒழுங்குகளை மேற்கொள்வதற்கும், தொடர் பயிற்சிகளை வழங்குவதற்காகவும் இலங்கை கிரிக்கெட் சபையிலிருந்து குமார் இராசநாயகம் யாழ்ப்பாணம் வருகை தந்துள்ளார்.

இந்தப் பயிற்சி முகாமில் இன்று கழக வீரர்களுக்கும், நாளை பாடசாலை வீரர்களுக்கும் பயிற்சி வழங்கப்பட்டு தெரிவு செய்யப்படும் 20 பந்துவீச்சாளர்களுக்கு சுழல் மற்றும் வேகப் பந்து வீச்சு பயிற்சிகள் தம்புள்ளவில் தொடர்ந்து வழங்கப்படவுள்ளது. (58)

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

யாழ்ப்பாணம் —

வண்ணார் பண்ணை இளையதம்பி இந்து வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் மு.செல்லையா தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் நல்லூர் கோட்டக்கல்விப் பணிப்பாளர் கே.வி.குணசேக ரம் பிரதம விருந்தினராகவும், தயா அச்சக உரிமையாளரும் பாடசாலையின் பழைய மாணவருமான திருமதி வி.தயாபரன் சிறப்புவிருந்தினராகவும் கலந்து கொள்வார்.


# Australian Red Cross (ARC)

## Working with the Sri Lanka Red Cross Society

# Vacancies

The Australian Red Cross is implementing projects in the House and Hospital Refurbishment, First Aid, Livelihoods and Organisational Development sectors. It presently has a team of 16 staff and has offices in Jaffna and Kilinochchi Districts, as well as a site office in Vadamarachi East.

**Finance/Administration Officer (Jaffna)**

**Qualifications:**
- Relevant tertiary level qualification.
- At least 3 years work experience in a similar position

**Competencies:**
- Fluent in English, both written and spoken.
- Strong understanding of HR, petty cash, budget and office management practices
- Very competent with Microsoft Office; good understanding of PC use and trouble - shooting
- Able to pick up new skills quickly
- Able to deliver results against specific objectives without constant supervision.

**Responsibilities:**
- Ensuring office is well maintained and functions effectively
- Managing petty cash, cash/bank reconciliations, working advances, and receipts/vouchers
- Facilitating budget development
- Facilitating travel by air to/from Colombo
- Supporting the administrative side of fleet management
- Managing correspondences and arranging meetings
- Supporting ARC security management plans
- Supporting ongoing recruitment

**Finance officer (Kilinochchi)**

**Qualifications:**
- Relevant tertiary level qualification.
- At least 3 years work experience in a similar position.

**Competencies:**
- Fluent in English, both written and spoken.
- Strong understanding of all standard office financial processes: petty cash, working advances, budgeting, reconciliation, managing journals, audit etc
- Very competent with Microsoft Office; good understanding of PC use and trouble-shooting
- Able to deliver results against specific objectives without constant supervision

**Responsibilities:**
- Managing petty cash, cash/bank reconciliations, working advances, and receipts/vouchers
- Facilitating budget development
- Executing payments
- Monitoring pay-roll and per diems
- Keeping appropriate filing system

**Administrative Officer (Kilinochchi)**

**Qualifications:**
- Relevant tertiary level qualification

**Competencies:**
- Fluent in English, both written and spoken.
- Very competent with Microsoft Office; good understanding of PC use and trouble- shooting
- Able to pick up new skills quickly
- Able to deliver results against specific objectives without constant supervision

**Responsibilities:**
- Ensuring office is well maintained and functions effectively
- Facilitating travel by road and air
- Managing correspondences and arranging meetings
- Managing the office filing system
- Supporting ARC security management plans
- Supporting ongoing recruitment

Applications (including Curriculum Vitae) should be submitted to the Director of the Sri Lanka Red Cross Society in Jaffna (73 Kandy Road) or Kilinochchi (Railway Station Road). Full details of educational background, work experience and referees must be provided.

**Application deadline:** Wednesday 22nd March 2006

**A competitive salary and benefits packages will be offered to the selected candidates.**

[C/5138]

# உள்ளூராட்சி தேர்தலின் பின்னர் 3 கட்சிகள் அரசுடன் இணையும்!

கொழும்பு —

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் பின்னர், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தலைமையிலான அரசாங்கத்துடன், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், இ.தொ.கா. மற்றும் மலையக மக்கள் முன்னணி ஆகிய மூன்று கட்சிகளும் இணையவுள்ளன.

இது தொடர்பாக இ.தொ.கா, மற்றும் மலையக மக்கள் முன்னணி இரண்டுக்கும் ஜனாதிபதி மற்றும் சிரேஷ்ட அமைச்சர்களுடன் பேச்சு வார்த்தை நடத்திய அதேவேளை, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஜனாதிபதியின் சகோதரரான பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுடன் பேச்சு நடத்தியுள்ளது.

இந்தக் கட்சிகள் அரசுடன் இணைவதற்கு ஜனாதிபதி தனது விருப்பத்தைத் தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகளுடன் நடைபெறவுள்ள இரண்டாம் சுற்று பேச்சு வார்த்தைக்குப் பின்னர், ஜே.வி.பி. மற்றும் ஜாதிக ஹெல உறுமய ஆகிய கட்சிகள் அரசுக்கெதிராக செயற்பட முன்வந்தால், இந்தக் கட்சிகளுடன் அரசின் பெரும்பான்மையை நிரூப்பது ஜனாதிபதியின் திட்டமெனத் தெரிவிக்கப்படுகிறது.

அரசுக்கு ஆதரவளிக்க வேண்டுமெனில், அமைச்சரவை அந்தஸ்துள்ள இரண்டு அமைச்சுப் பதவிகள் வழங்கப்பட வேண்டுமெனவும், இந்தப் பதவிகள் ஆறுமுகம் தொண்டமானுக்கும், பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.சச்சிதானந்தனுக்கும் வழங்கப்பட வேண்டுமெனவும் இ. தொ.கா.கோரிக்கை விடுத்துள்ளது. அத்துடன் இ.தொ.காவிலிருந்து அரசுடன் இணைந்து பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வடிவேல் - சுரேஷின் பிரதியமைச்சர் பதவியும் மீளப் பெறப்பட வேண்டுமெனவும், தெரிவிக்கப்பட்டுள்ளது.

முஸ்லிம் காங்கிரஸின் ஆதரவு அரசுக்கு வழங்கப்பட வேண்டுமெனில், எதிர்வரும் சமாதானப் பேச்சில் முஸ்லிம் காங்கிரஸிற்கு தனித் தரப்பு வழங்கப்பட வேண்டு மெனவும், தமது அரசியற் செயற்பாடுகளுக்கு விடுக்கப்படும் அச்சுறுத்தல்கள் நிறுத்தப்பட வேண்டுமெனவும் நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது. (தே)

## பதவி உயர்வுகளில் பாரபட்சம்; பொலிஸாருக்குள் அதிருப்தி!

கொழும்பு —

மகிந்த சிந்தனைக்கு அமைய மேற்கொள்ளப்பட்டு வரும் பதவி உயர்வுகளில் கொழும்பிலுள்ள சில பொலிஸ் நிலையங்கள் உரிய வகையில் கவனிக்கப்படவில்லை என்று அதிகாரிகள் விசனம் தெரிவித்துள்ளனர். கொன்ஸ்டபிள் பதவியிலிருந்து சார்ஜன்ட் ஆக பதவி உயர்வு பெற வேண்டியவர்களுக்கு உயர் அதிகாரிகள் அடிப்படையற்ற விடயங்களை முன்வைத்து தடங்கல் ஏற்படுத்துவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உயர் பொலிஸ் அதிகாரிகளால் நியாயமற்ற வகையில் சில காலங்களுக்கு முன்னர் வழங்கப்பட்ட ஊதியமற்ற விடுமுறைகளைக் காரணம் காட்டி இவ்வாறு தடங்கல்களை ஏற்படுத்துவதாகப் பாதிக்கப்பட்ட பொலிஸார் தெரிவித்தனர்.

## மட்டக்களப்பு படுகொலைக்கு விடுதலைப்புலிகள் கண்டனம்!

மட்டக்களப்பு —

மட்டக்களப்பில் இருந்து சின்ன ஊரணிப்பகுதிக்குப் பஸ்ஸில் பயணம் செய்து கொண்டிருந்த இளைஞன் - பஸ்ஸினுள் வைத்து சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்துக்கு மட்டக்களப்பு மாவட்ட அரசியல்துறைப்பொறுப்பாளர் தயாமோகன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

தமிழ் - முஸ்லிம் மக்களுக்கிடையேயான உறவை சீரழித்தும், தமிழ் மக்களை கொன்றொழிக்கும் படையினரதும், அவர்களுடன் சேர்ந்தியங்கும் ஒட்டுக் குழுக்களினதும் இந்தச் செயற்பாட்டை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

ஜெனிவா பேச்சுக்களின் பின்னர் படைகளின் செயற்பாடுகளில் எதுவித மாற்றமும் இல்லை. இத்தகைய செயற்பாடுகள் எமது மக்களைக் கடும் விசனத்துக்குள்ளாக்கியுள்ளது என்று தயா மோகன் மேலும் தெரிவித்தார்.

## 108 பின்தங்கிய பாடசாலைகளில் சத்துணவு வழங்கும் திட்டம்

கொழும்பு —

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் பின் தங்கிய பிரதேசங்களைச் சேர்ந்த 108 பாடசாலைகளில் கல்வி கற்கின்ற மாணவர்களுக்கு ஐக்கிய நாடுகள் சபையின் உலக உணவுத் திட்டத்தின் மூலம் இலவச சத்துணவு வழங்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தை இரண்டு ஆண்டுகளுக்கு உலக தரிசன நிறுவனம் அமுல்படுத்தியிருக்கிறது. இந்தத் திட்டத்தின் கீழ் அம்பாறை, முல்லைத்தீவு மாவட்டங்களில் தலா 21 பாடசாலைகளும், யாழ்ப்பாணத்தில் 26 பாடசாலைகளும், திருகோணமலை மாவட்டத்தில் 16பாடசாலைகளும் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

பாடசாலைகளில் கல்வி பயிலுகின்ற தரம் ஒன்று தொடக்கம் 9 வரையிலான மாணவர்கள் இந்தத் திட்டத்தின் மூலம் நன்மையடைய முடியும். (01)

## கிராமிய பயிற்சியை நிறைவு செய்து மூன்றாவது அணி வெளியேறியது





திருகோணமலை —

திருகோணமலை ஈச்சிலம்பற்றில் கிராமிய படையணியின் மூன்றாவது அணியினர் தமது பயிற்சிகளை நிறைவு செய்து வெளியேறி யுள்ளனர். 150 பேரைக் கொண்ட அணியினரே தமது பயிற்சிகளை நிறைவு செய்து வெளியேறியுள்ளனர்.

ஈச்சிலம்பற்று ஸ்ரீசண்பகா மகாவித்தியாலயத்தின் மைதானத்தில் மாலை 3.30 மணியளவில் இடம்பெற்ற இந்த பயிற்சி நிறைவு நிகழ்வில் திருகோணமலை மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் சொர்ணம், திருகோணமலை மாவட்ட இராணுவத் தளபதி வசந்தன், மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் எழிலன் ஆகியோர் உட்பட விடுதலைப்புலிகளின் தளபதிகள், பொறுப்பாளர் மற்றும் போராளிகள் எனப் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்

அதேவேளை கிராமியப் படையணியினரின் பெற்றோர்கள், பொதுமக்கள், மாணவர்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டு கிராமியப் படையினரை வரவேற்று உற்சாக மூட்டினர். கிராமியப் படையணியினரின் அணிவகுப்பு மரியாதையை தமிழீழ விடுதலைப்புலிகளின் திருகோணமலை மாவட்ட கட்டளைத்தளபதி கேணல் சொர்ணம் ஏற்றுக்கொண்டார். (04)

## கோழிசார் உணவுப் பொருட்களின் விற்பனையை அதிகரிக்க நடவடிக்கை

### பண்ணையாளர்கள் பிரசாரம்

கொழும்பு —

இலங்கையில் பறவைக்காய்ச்சல் நோய் இல்லையெனவும், எனவே, கோழி சார்ந்த உணவுப் பொருட்களை உண்ணலாம் என தெரிவித்து அவற்றின் விற்பனையை அதிகரிக்கும் நோக்குடன் கோழிப் பண்ணையாளர்கள் பிரசார நடவடிக்கையை ஆரம்பித்துள்ளனர்.

இதன்படி, அவர்கள் சுவரொட்டி மற்றும் வானொலி, தொலைக்காட்சி மூலம் தமது பிரசார செயற்பாட்டை ஆரம்பித்துள்ளனர்.

இந்தியாவில் பறவைக்காய்ச்சல் பரவியுள்ளதாக வெளியான செய்தியை அடுத்து கடந்த மாதத்திலிருந்து கோழிகளின் விற்பனை 20 வீதத்தால் வீழ்ச்சி கண்டுள்ளது.

கோழிகள் மற்றும் முட்டைகளை வாங்குவதற்கு எவ்வித அச்சமும் அடையத்தேவையில்லை. இது நூறுவீத உள்ளூர் உற்பத்தியாகும். என தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

எமது கோழி உற்பத்தி, பறவைக் காய்ச்சலிலிருந்து விடுபட்டதாகும். கோழி சார்ந்த உணவு வகைகளையும், உயிருடன் கூடிய கோழிகளுக்கும் கடந்த 9 மாதங்களுக்கு முன்னரேயே இறக்குமதி தடையை அரசாங்கம் விதித்துள்ளதென வளர்ப்பு பிராணிகள் சங்கத் தலைவர் டி.டி.வனசிங்க தெரிவித்தார்.

இலங்கையில் பறவைக்காய்ச்சலால் எவரும் பாதிக்கப்பட்டதான எவ்வித சம்பவமும் இல்லையென கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் பணிப்பாளர் டொக்டர் அமரசேகர தெரிவித்தார்.

கோழிகளை நன்கு வேகவைத்து உண்டால் பறவைக் காய்ச்சல் குறித்து எவ்வித அச்சமும் அடையத் தேவையில்லையென உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது (01).(தே)

## புலிகள் கொண்டு வந்த நைட் விசன் படையினரிடம் கூட இல்லையாம்!

### கொழும்பு பத்திரிகை கூறுகிறது

கொழும்பு —

நோர்வே கடவுச்சீட்டுடன் வந்த விடுதலைப்புலிகளின் உறுப்பினர்களில் ஒருவரான தர்மசேகரன் என்பவரது பயணப் பொதியில் இருந்த லேசர் நைட் விசன் கருவியானது- அரச படையினரிடம் கூட இல்லாதது என்று பாதுகாப்பு தரப்பு அதிகாரி ஒருவர் கூறியதாகக் கொழும்பு பத்திரிகைச் செய்தி வெளியிட்டுள்ளது.

தர்மசேகரனின் பயணப் பொதியில் இந்த 40 நவீன இரவுப் பார்வை உபகரணங்கள் இருந்துள்ளன.

இந்த உபகரணங்களை நோர்வேயிலிருக்கும் ஒரு ஆயுத முகவரிடமிருந்து பெற்றிருப்பதாக ஒஸ்லோ தகவல்கள் தெரிவித்தன.

சுங்கப் பிரிவிலிருந்து வெளியே எடுப்பதற்கு விமான நிலைய நிறைவேற்று அதிகாரி ஒருவர் சுங்கப் பிரிவினருக்கு அழுத்தங்களைக் கொடுத்த போதிலும் அவரின் உத்தரவு நிராகரிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பமைச்சின் அனுமதியின்றி இந்த யுத்த உபகரணங்கள் கொண்டு வரப்பட்டுள்ளதால், இது நாட்டின் சட்டத்தை மீறும் செயல் என்று சுங்கப் பிரிவினர் அவருக்கு எடுத்துக்கூறியதாகச் சுங்கப்பிரிவு பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகளுக்கு இந்த நைட் விசன் உபகரணங்கள் கிடைத்தமை தொடர்பாக இதுவரை எந்தவித விசாரணைகளும் தொடங்கப்படவில்லை என்றும் அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (தே)

## நிர்வாக சேவை வெற்றிடத்துக்கு 53 அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர்

கொழும்பு —

நிர்வாக சேவையில் நிலவும் வெற்றிடங்களை நிரப்பும் வகையில் 53 நிர்வாக சேவை அதிகாரிகளை பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் சரத்அமுனுகம நியமித்துள்ளார்.

வடக்கு - கிழக்கு உட்பட நாடளாவிய ரீதியில் இந்த நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளது. உதவிப்பணிப்பாளர் மற்றும் அதற்குச் சமமான பதவிகள் இவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

போட்டிப் பரீட்சையின் மூலம் தெரிவு செய்யப்பட்டு, நிர்வாக சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்ட இந்த அதிகாரிகளுக்கு இலங்கை நிர்வாக அபிவிருத்தி நிறுவனத்தில் மூன்று மாதகால பயிற்சி வழங்கப்பட்டவுள்ளது.

பொது நிர்வாக அமைச்சின் ஏற்பாட்டில் அண்மையில் மாவட்டச் செயலாளர்களுக்கான மாநாடு ஒன்று நடைபெற்றது.

இதில் வெற்றிடமாகவுள்ள நிர்வாக சேவை பதவிகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டதுடன், இந்த வெற்றிடங்கள் தொடர்பான விபரங் களைத் தமக்கு அறியத் தருமாறு அமைச்சின் செயலாளர் டி.திஸ நாயக்க மாவட்டச் செயலாளர்களைக் கோரியிருந்தார். இதனையடுத்து மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை மூலமே இந்த 53 நிர்வாக சேவை அதிகாரிகளும் நியமிக்கப்பட்டனர். (01).(தே)

## பல்கலைக்கழக அனுமதி குறித்த இறுதிமுடிவு இதுவரை எடுக்கவில்லை

### மானிய ஆணைக்குழு உதவிச் செயலர் தகவல்

கொழும்பு —

பல்லைக்கழகங்களுக்கு இந்த வருடம் புதிய மாணவர்களை எப்போது அனுமதிப்பதென இதுவரை இறுதிமுடிவு எதுவும் எடுக்கப்படவில்லையெனப் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் எம்.ஹேமகுமார தெரிவித்தார்.

இரசாயனவியல் உட்பட க.பொ.த உயர்தர பரீட்சையின் மீளாய்வு பெறுபேறுகள் அடிப்படையில் பல்கலைக் கழகப் பாடநெறிகளை மாற்றிக் கொள்ள மாணவர்கள் சமர்ப்பித்த விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்த பின்னரே இது குறித்து இறுதி முடிவு எடுக்கப்படும் எனத் தெரிவித்தார்.

கடந்த வருடம் க.பொ.த.உயர்தர பரீட்சைக்கு தோற்றிய பல மாணவர்கள் - இரசாயனவியல் உட்பட பாடங்களின் பரீட்சை மீளாய்வுக்கு விண்ணப்பித்த பின்னர் இடம்பெற்ற காலதாமதத்தால், பல்கலைக்கழக அனுமதிக்கான இசட் புள்ளிகள் வெட்டுப்புள்ளி அறிவித்த பின்னரும் பல்கலைக்கழகங்களுக்குப் புதிய மாணவர்கள் குறித்தபடி அனுமதிக்கப்படுவதில் காலதாமதம் ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை - மேற்படி மீளாய்வு அடிப்படையில் மத்திய மாகாணம், தென்மாகாணம், சப்ரகமுவ, கொழும்பு உட்பட்ட பிரதேசங்களில் கடந்த க.பொ.த உயர்தர பரீட்சை மீளாய்வில் இரசாயனவியல் பரீட்சையில் பலர் சித்தியடைந்திருப்பதாகப் பரீட்சைத் திணைக்களத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். (தே)

## தேர்தல் ஏற்பாடு குறித்து ஆராய உயர்மட்ட மாநாடு

கொழும்பு —

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பான ஏற்பாடுகள் குறித்து ஆராய உயர்மட்ட மாநாடு நாளை மறுதினம் திங்கட்கிழமை நடைபெறும் எனத் தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க தெரிவித்துள்ளார்.


எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தல் காலப்பகுதியில் அரசியல் கட்சிகள் நடந்துகொள்ளவேண்டிய முறை மற்றும் தேர்தல் தொடர்பான அடிப்படை சட்ட திட்டங்கள் குறித்துப் புரிந்துணர்வை ஏற்படுத்தும் வகையிலேயே இந்தக் கூட்டம் நடத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இந்தத் தேர்தலில் பங்குகொள்ளும் சுயேட்சைக் குழு வேட்பாளர்களுக்கு அன்றைய தினம் தெரிவத்தாட்சி அலுவலகர் விஷேட கூட்டம் ஒன்றைநடத்தவுள்ளதாகத் தெரிவித்தார்.

# வடக்கின் பெரும் கிரிக்கெட் போர் சமனிலையில் முடிவடைந்தது


சஞ்சீவன்


சுதர்சன்


நிருபன்


சகிந்தன்







யாழ்ப்பாணம் —

வடக்கின் பெரும்போர் என வர்ணிக்கப்படும் யாழ்.மத்திய கல்லூரி மற்றும் பரியோவான் கல்லூரி அணிகளுக்கிடையிலான 100ஆவது கிரிக்கெட் போட்டி சம[illegible]லையில் முடிவுற்றது.

போட்டியின் மூன்றாவதும், இறுதி நாளுமான நேற்று பரியோவான் கல்லூரி 8 விக்கெட்டுக்களை இழந்து 258 ஓட்டங்களைப் பெற்றநிலையில் ஆட்டத்தை டிக்ளேர் செய்தது.

நேற்றுமுன்தினம் ஆட்டமிழக்காதிருந்த நிரூபன் 38, சஞ்சீவன் 29 [illegible]ங்களுடன் நேற்று தமது ஆட்டத்தைத் [illegible]தொடர்ந்தனர்.

இரு[illegible]ரும் மிகவும் நிதானமாக ஆடி இணைப்பாட்டமாக 181 ஓட்டங்களைப் பகிர்ந்து கொண்டனர். அணியின் ஸ்கோர் 250 ஐத் தொட்டபோது - சுதர்சனின் பந்துவீச்சில் நிரூபன் 97 ஓட்டங்களுடன் போல்டானார்.

அடுத்ததாக கஜரூபன் சஞ்சீவனுடன் இணைந்து ஆடினார். அணி மேலும் 8 ஓட்டங்களைப் பெற்றபோது - 84 ஓட்டங்களைப் பெற்றிருந்த சஞ்சீவன் - சுதர்சனின் பந்துவீச்சில் எல்.பி. டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார்.

இந்த நிலையில் 258 ஓட்டங்களுக்கு 8 விக்கெட்டுக்களை இழந்திருந்த பரியோவான் கல்லூரி ஆட்டத்தை டிக்ளேர் செய்தது.

கஜரூபன் 4 ஓட்டங்களுடன் இறுதி வரை ஆட்டமிழக்காதிருந்தார்.

நேற்று வீழ்த்தப்பட்ட இரு விக்கெட்டுக்களையும் சுதர்சன் கைப்பற்றினார்.

தொடர்ந்து தனது இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாட மத்திய கல்லூரி களமிறங்கியது. ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களாக சுதர்சனுடன், பிரசாத் களமிறங்கினார்.

அந்த அணி 9 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது, நிரூபனின் பந்துவீச்சில் கஜரூபனிடம் பிடிகொடுத்து சுதர்சன் ஆட்டமிழந்தார்.

அவரைத் தொடர்ந்து களமிறங்கிய செல்ரன் ஸ்கோர் 12ஆக இருந்தபோது - ஓட்டமெதையும் பெறாமல் நிரூபனின் வீசிய பந்தை ராகுலனிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து பிரகாஷ் களமிறங்கினார். ஆனால், ஸ்கோர் 12 ஆக இருந்த நிலையிலேயே பிரசாத் ஓட்டமெதையும் பெறாமல் நிரூபனின் பந்துவீச்சில் போல்டானார்.

பரியோவான் கல்லூரியினரின் துல்லியமான பந்துவீச்சுக்கு முகம் கொடுக்க முடியாத நிலையில் சொற்ப ஓட்டங்களுக்குள் முன்னணி வீரர்களை இழந்து மத்திய கல்லூரி அணி. தவித்தது.

அடுத்து பிரகாஷுடன், டயான் இணைந்து கொண்டார். இவர்கள் இருவரும் நிதானமாக ஆடி அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்திக்கொண்டிருந்தபோது - கஜரூபனின் பந்துவீச்சில் 22 ஓட்டங்களைப் பெற்றிருந்த பிரகாஷ் - நேசவர்மனிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து ஜோன்சன் களமிறங்கினார். இவர்கள் இருவரும் நிதானமாக ஆடிக்கொண்டிருந்தனர். மத்திய கல்லூரி 4 விக்கெட் இழப்புக்கு 121 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது - மழையின் குறுக்கீட்டால் ஆட்டம் சமனிலையில் முடிவுற்றதாக அறிவிக்கப்பட்டது.

இந்தப் போட்டியில் மேலும் 8 ஓவர்களே வீசப்படவேண்டியிருந்தது.

ஆடுகளத்தில் டயான் 47 ஓட்டங்களுடனும், ஜோன்சன் 35 ஓட்டங்களுடனும் இறுதிவரை ஆட்டமிழக்காதிருந்தனர்.

உதிரிகளாக 08 ஓட்டங்கள் மத்திய கல்லூரி அணிக்கு கிடைக்கப்பெற்றது.

பந்துவீச்சில் நிரூபன் 3, கஜரூபன் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இந்தப் போட்டியில் மத்திய கல்லூரி தனது முதலாவது இனிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 219 ஓட்டங்சளையும், இரண்டாவது இனிங்ஸில் 4 விக்கெட் இழப்புக்கு 121 ஓட்டங்களையும் பெற்றிருந்தது.

பரியோவான் கல்லூரி தனது முதலாவது இனிங்ஸில் 8 விக்கெட் இழப்புக்கு 258 ஓட்டங்களைப் பெற்றது.

இந்தப் போட்டியின் சிறந்த துடுப்பாட்ட வீரராக பரியோவான் கல்லூரியின் ஜி.சஞ்சீவனும், சிறந்த பந்துவீச்சாளராக மத்திய கல்லூரியின் வி.சுதர்சனும், சிறந்த களத்தடுப்பாளராக பரியோவான் கல்லூரியின் சி.சகிந்தனும், சகலதுறை ஆட்டக்காரராகவும், ஆட்டநாயகனாகவும் பரியோவான் கல்லூரியின் நிரூபனும் தெரிவு செய்யப்பட்டனர். (வ,58, 90)

# பொன் அணிகளின் போரும் மழையால் சமனிலையானது


மயூரன்


ஜேந்திரன்

யாழ்ப்பாணம் —

பொன் அணிகளின் போர் என வர்ணிக்கப்படும் சென்.பற்றிக்ஸ், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணிகளுக்கிடையிலான 80 ஆவது கிரிக்கெட் போட்டி மழையால் சமனிலையில் முடிவுற்றது.

நேற்றையதினம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி 6 விக்கெட் இழப்புக்கு 247 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை டிக்ளேர் செய்தது.

நேற்றுமுன்தினம் ஆடிய சென். பற்றிக்ஸ் கல்லூரி 2 ஓவர்களில் ஓட்டமெதையும் பெறாமல் நேற்று ஆட்டத்தைத் தொடர்ந்தது.

ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களாக ஏ.ஜேந்திரன், என்.ஜே.மனோஜ் ஆகியோர் களமிறங்கியிருந்தனர். அந்த அணி12 ஓட்டங்களைப்பெற்றநிலையில் மனோஜ் 8 ஓட்டங்களைப் பெற்று செந்தூரனின் பந்துவீச்சில் போல்டானார்.

அடுத்ததாக எஸ்.ஜனன்ராஜ் களமிறங்கினார். மறுமுனையில் ஜேந்திரன் நிதானமாக ஆடிக்கொண்டிருக்க - ஜனன்ராஜ் 3 ஓட்டங்களுடன் ஜெ.நிதீசனின் பந்துவீச்சில் நிரோஜனிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து ஏ.மரின்குமார் களமிறங்கினார். இவர் 16 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது - நிரோஜனின் பந்துவீச்சில் போல்டானார்.

அவரைத் தொடர்ந்து களமிறங்கிய ஜெ.ஜதீஸ்வரன், ஜேந்திரனுடன் இணைந்து நிதானமாக ஆடினார்.

இந்த நிலையில் ஜேந்திரன் 50 ஓட்டங்களைக் கடந்தார். ஜதீஸ்வரன் 24 ஓட்டங்களைப் பெற்று - அமலதீசனின் பந்துவீச்சில் நிதீசனிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்ததாக ஜக்சன் களமிறங்கினார். இந்த இருவரும் சிறப்பாக ஆடினர். ஐந்தாவது விக்கெட்டுக்காக இவர்கள் 101 ஓட்டங்களைப் பகிர்ந்து சாதனை படைத்தனர்.

இந்தநிலையில் சிறப்பாக 98 ஓட்டங்களைப் பெற்ற ஜேந்திரன், அமலதீசனின் பந்துவீச்சில் மயூரனிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அவரைத் தொடர்ந்து வி.ஜே. லோட்சன் களமிறங்கினார். ஜக்சனும், லோட்சனும் சிறப்பாக ஆடினர். ஸ்கோர் 247 ஐத் தொட்டபோது - ஜக்சன் 59 ஓட்டங்களைப் பெற்று - ஜனார்த்தனின் பந்துவீச்சில் போல்டானார்.

இந்தநிலையில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி ஆட்டத்தை டிக்ளேர் செய்தது.

லோட்சன் 30 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதிருந்தார்.

பந்துவீச்சில் அமலதீசன் 2, நிரோஜன், நதீசன், ஜெனார்த்தனன் மற்றும் செந்தூரன் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

தொடர்ந்து தனது இரண்டாவது இனிங்ஸை யாழ்ப்பாணக் கல்லூரி ஆட களமிறங்கியது. ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களாக எஸ்.யதுர்சன், பிரியதர்சன் ஆகியோர் களமிறங்கினர்.

ஸ்கோர் 7 ஐத் தொட்டபோது - பிரியதர்சன் கொலினின் பந்துவீச்சில் மரின்குமாரிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து செந்தூரன் களமிறங்கினார். ஆனால், யதுர்சன் 1 ஓட்டத்துடன் கொலினின் பந்துவீச்சில் போல்டானார்.

அவரைத் தொடர்ந்து டிசான் களமிறங்கினார். அணி மேலும் 5 ஓட்டங்களைப் பெறுவதற்குள் செந்தூரன் கொலினின் பந்துவீச்சில் 6 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

இந்த நிலையில் டிசான் 11 ஓட்டங்களுக்கு றெக்னோ வீசிய பந்தை கொலினிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்ததாக மயூரனுடன், ஜனார்த்தன் இணைந்து கொண்டார். ஜனார்த்தனன் ஓட்டமெதையும் பெறாமல் ஜக்சன் வீசிய பந்தை கொலினிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து ஜெ.நிதீசன் களமிறங்கினார். அவர் ஓட்டமெதையும் பெறாமலேயே மரின்குமார் வீசிய பந்தை ஜனன்ராஜிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்ததாக களம்புகுந்த வியோல், மயூரனுடன் நிதானமாக ஆடிக்கொண்டிருந்தபோது - மயூரன் 5 ஓட்டங்களுடன் மரின்குமார் வீசிய பந்தை லோட்சனிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அவரையடுத்து சசிதரன் களமிறங்கினார். இவர் வியோலுடன் சேர்ந்து சென்.பற்றிக்ஸ் கல்லூரி பந்துவீச்சாளர்களின் பந்தை நிதானமாக எதிர்கொண்டு ஆடினார்.

66 ஓட்டங்களுக்கு 8 விக்கெட்டுக்களை இழந்து பரிதவித்த யாழ்ப்பாணக் கல்லூரி அணிக்கு மழை கைகொடுத்தது. ஆட்டம் தொடரமுடியாத நிலையில் - போட்டி வெற்றிதோல்வியின்றி முடிவுற்றதாக அறிவிக்கப்பட்டது.

ஆடுகளததில் வியோல் 19, சசிதரன் 10 ஓட்டங்களுடன் இறுதிவரை ஆட்டமிழக்காதிருந்தனர்.

பந்துவீச்சில் கொலின் 3, றெக்னோ, மரின்குமார் ஆகியோர் தலா 2, ஜக்சன் 1 விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இந்தப் போட்டியில் யாழ்ப்பாணக் கல்லூரி தனது முதலாவது இனிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 128 ஓட்டங்களையும், இரண்டாவது இனிங்ஸில் 8 விக்கெட் இழப்புக்கு 66 ஓட்டங்களையும் பெற்றது.

சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி தனது முதல் இனிங்ஸில் 6 விக்கெட் இழப்புக்கு 247 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

இந்தப் போட்டியின் சகலதுறை ஆட்டக்காரராக சென்.பற்றிக்ஸ் கல்லூரியின் டபிள்யூ.ஐ.ஜக்சனும், சிறந்த பந்துவீச்சாளராக சென்.பற்றிக்ஸ் கல்லூரியின் கொலினும், சிறந்த களத்தடுப்பாளராக யாழ்ப்பாணக் கல்லூரியின் ஆர்.மயூரனும்-

போட்டியின் ஆட்டநாயகனாகவும், சிறந்த துடுப்பாட்ட வீரராகவும் சென். பற்றிக்ஸ் கல்லூரியின் ஏ.ஜேந்திரனும் தெரிவு செய்யப்பட்டனர்.






ஜக்சன்

# பெண்கள் தமக்குத்தாமே விதித்திருக்கும் சுய கட்டுப்பாடுகளிலிருந்து விடுபட வேண்டும்

## பல்கலைக்கழக நூலகர் திருமதி ஶ்ரீஅருளானந்தம்

மட்டுவில்—

பெண்கள் தமது உரிமைகளுக்காகப் போராட்டங்கள் நடத்துவதை விடுத்து, தங்களிடமிருந்து தாங்களே தங்களுக்குள் விதித்திருக்கும் சுயகட்டுப்பாடுகளிலிருந்து விடுதலை பெற வேண்டும். திருமணமாகும்வரை தன்னை அழகுபடுத்துவதில் கவனஞ் செலுத்தும் பெண் திருமணமாகி குழந்தையும் பிறந்துவிட்டால் தன்னை அழகுபடுத்துவதில் தவறுகின்றாள் என யாழ்.பல்கலைக்கழக கல்விசார் நூலகர் திருமதி. ஶ்ரீ அருளானந்தம் தெரிவித்தார்.

தென்மராட்சி சமுர்த்தி மன்றத்தால் மார்ச் 8 ஆம் திகதி நடத்தப்பட்ட மகளிர் தின நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் -

குழந்தை, வீட்டு வேலைகள் என மூழ்கிவிடுவதால் நேரமில்லை என்பது சாட்டு. நீங்கள் எவ்வளவு தூரம் உங்களை அழகுபடுத்தி ஒழுங்காக இருக்கிறீர்களோ அந்தளவுக்கு உங்கள் மீது உங்கள் கணவர் பற்றும், பாசமும் கொண்டிருப்பார்.

சுமார் 150 ஆண்டுகளுக்கு முன்னர் அமெரிக்காவில் பெண்தொழிலாளர்கள் ஆண்களுக்கு ஈடான சம்பளம் மற்றும் 10 மணிநேர வேலை கேட்டு தொழிற்சங்க நடவடிக்கை எடுத்த நாளே இந்த மார்ச் 8 ஆம் திகதி ஆகும். இதுவே இன்று பெண்ணிய இயக்கங்களால் மகளிர் தினமாகக் கடைப்பிடிக்கப்படுகிறது எனத் தெரிவித்தார்.

தொடர்ந்து அங்கு உரை நிகழ்த்திய அவர் பெண்களிடம் இயல்பாகவே உள்ள ஆற்றல், ஆளுமை என்பவற்றை வெளிக்கொணரவேண்டும். நகரப் பெண்களைவிட கிராமப் பெண்களிடம் முடிவெடுக்கும் ஆற்றல், செயலாற்றும் திறன் அதிகம்.

உங்களுக்கே தெரியாமல் உங்களுக்குள் இருக்கும் திறமைகளை நீங்கள் வெளிக்கொணர வேண்டும். உங்கள் மீது அடுத்தவர் மரியாதை கொள்ளக்கூடியவாறு நடத்தல் வேண்டும். பெண்கள் தினம் என்று கொண்டாடப்படுவது நிறுத்தப்படவேண்டிய சூழல் உருவாகவேண்டும்.

எனவே, நீங்கள் பெண்கள். பிறரிடமிருந்து விடுதலை பெறுவதை விட்டு, உங்களிடமிருந்தே நீங்கள் விடுதலை பெறவேண்டும். அப்போது தான் ஒட்டுமொத்த பெண்களுக்கும் விடுதலை கிடைக்கும் எனத் தெரிவித்தார். (24)



நிகொட் நிறுவனத்தால் யாழ். சென். ஜேம்ஸ் மகளிர் பாடசாலைக்குப் புதிதாக அமைக்கப்பட்டுவரும் மூன்று மாடிக் கட்டட வேலைகள் ஆரம்பத்தின் போது பங்குத் தந்தை அருட்பணி ஆர்.எச்.சகாயநாயகம் அடிகளார் ஆசீர்வதிக்கும் காட்சியைப் படத்தில் காணலாம். (206)

# வர்த்தக நிலைய உரிமையாளர் ஏழாலையில் தாக்கப்பட்டார்!

## - மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு -

யாழ்ப்பாணம்—

ஏழாலை - மயிலங்காட்டில் வர்த்தக நிலைய உரிமையாளர் ஒருவர் இராணுவத்தால் கடும் சோதனைக்கு உட்படுத்தித் தாக்கப்பட்டதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது

மேற்படி ஏழாலை மயிலங்காட்டிலுள்ள தொலைத்தொடர்பகம், உணவகம் உள்ளிட்ட வர்த்தக தொகுதியை நேற்றுமுன்தினம் அதிகாலை 3.30 மணியளவில் கவச வாகனங்களில் வந்த நூற்றுக்கணக்கான படையினர் சுற்றிவளைத்துத் தேடுதல் நடத்தினர். இதன்போது பேக்கரி அமைந்துள்ள காணியின் பின்பகுதியும் உழவு இயந்திரத்தால் கிளறப்பட்டு சோதனை மேற்கொள்ளப்பட்டது.

இதன் பின்னர் தொடர்ந்து வர்த்தக நிலையத்தின் உரிமையாளரான இளைஞரை வர்த்தகநிலைய அறையொன்றினுள் பூட்டி கடுமையாக விசாரணைக்கு உட்படுத்தியதுடன், கறுப்புத்துணி முகத்தில் அணிந்த இராணுவத்தினர் உரிமையாளரைத் தாக்கியதாக முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், வர்த்தக நிலையத்திலுள்ள பொருட்களும் துருவி, துருவி சோதனைக்குட்படுத்தப்பட்டதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

படையினர் - ஒருவரை கைது செய்யவோ, விசாரணைக்காக ஒருவரை அணுகவோ அந்தப் பகுதி கிராம அலுவலரும் பிரசன்னமாக இருக்க வேண்டும் எனவும், பொது இடங்களில் கடமையில் ஈடுபடும் இராணுவ வீரர்கள் முகத்தை துணியால் மறைக்காது தம்மை யார் என அடையாளம் காட்டி கடமையில் ஈடுபட வேண்டும் என அண்மையில் யாழ் மேலதிக நீதிவான் உத்தரவு பிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ரி) (த)

# தனங்களப்பு மீனவருக்கு மீன்பிடி வலைகள் அன்பளிப்பு


யாழ்ப்பாணம்—

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட சாவகச்சேரி - தனங்களப்பு மீனவர்களுக்கு அகதிகள் புனாவாழ்வுக் கழகம் மீன்பிடிவலைகளை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

இந்த மீன்பிடி வலைகள் வழங்கும் நிகழ்வு கடந்த 9 ஆம் திகதி அகதிகள் புனர்வாழ்வுக்கழகத்தில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் - அகதிகள் புனர்வாழ்வுக்கழக நிகழ்ச்சித் திட்ட முகாமையாளர் தேவானத், தனங்களப்பு கூட்டுறவுச் சங்கத் தலைவர் செ.கந்தசாமி, அகதிகள் புனர்வாழ்வுக் கழகத் தலைவர் பேராசிரியர் ப.சிவநாதன், கடற்தொழில் நீரியல் வளத் திணைக்கள உதவி இயக்குநர் கே.தர்மலிங்கம், சாவகச்சேரி கடற்தொழில் பரிசோதகர் ரி.அமுதினி ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

இதன்போது 25 ஆயிரம் ரூபா பெறுமதியான மீன்பிடி வலைகளும், மீன்பிடி உபகரணங்களும் மீனவர்களுக்கு வழங்கப்பட்டன. (ரி)



காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் நடைபெற்ற தென்னங்கன்று வழங்கும் வைபவத்தில் - யாழ். மாவட்ட தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜெ.சத்தியேந்திரன் காரைநகர் உதவி அரசாங்க அதிபர் க.சிறிமோகனனுக்கு மாலை அணிவிப்பதையும், அருகில் பிராந்திய முகாமையாளர் க.தேவேந்திரனையும் படத்தில் காணலாம்.

# செயலமர்வு

மானிப்பாய்—

வலிகாமம் வலயப் பாடசாலைகளில் தரம் 4, 11 ஆகியவற்றில் யுனிசெவ் மொழித்திறன் விருத்தி செயல் திட்டத்தை மேற்கொள்ளும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு எதிர்வரும் 15 ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கு மருதனார் மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (100)

# இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

## அகவை ஒன்று



பெயர் : மு.ஆதீத்தியன்
முகவரி : முடக்காடு.

## அகவை இரண்டு



பெயர் : ரி.நிலக்ஷி
முகவரி : பலாலி கிழக்கு.

## வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர் ----------------
முகவரி ----------------
பிறந்த ஆண்டு: ----------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

----------------
பெற்றோர் ஒப்பம்

# கிராம அபிவிருத்திச் சங்கத்தின் புதிய நிர்வாக சபைத் தெரிவு

மட்டுவில்—

தென்மராட்சி கிராம அபிவிருத்திச் சங்கங்களின் சமாசத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டமும், புதிய நிர்வாக சபைத் தெரிவும் நேற்று முன்தினம் காலை 10 மணிக்கு தென்மராட்சி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

மௌனவணக்கம், தலைமையுரை, செயலாளர் அறிக்கை, பொருளாளர் அறிக்கை என்பவற்றைத் தொடர்ந்து புதிய நிர்வாகசபைத் தெரிவும் இடம்பெற்றது.

இதில் தலைவராக ச.தங்கராசா, உபதலைவராக அ.திருநாவுக்கரசு, பொருளாளராக இ.இரவீந்திரராசா, உபசெயலாளராக திருமதி யோ.தவபாலன், பொருளாளராக கு.நடராசா ஆகியோரும் மேலும் 16 நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டனர்.

சமாசத் தலைவர் க.சுப்பிரமணியக் குருக்கள் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில்- தென்மராட்சிப் பிரதேச செயலர் செ.ஶ்ரீநிவாஸன், கிராம அபிவிருத்தி அலுவலர் ச.உமாபாலன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் ஐக்கிய நாடுகள் அமைப்புகளிடமிருந்து திட்டங்களுக்கான நிதியுதவியை நேரடியாகப் பெற்று கிராமங்கள் தோறும் நடைமுறைப்படுத்தல்,

கிராம அபிவிருத்திச் சங்கங்களால் செயற்படுத்தமுடியாத திட்டங்களை சமாசம் பொறுப்பேற்று நடத்துதல் ஆகிய தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. (24)

# சைவசமய அறிவுப் பரீட்சை

யாழ்ப்பாணம்—

வண்ணை - சாந்தையர் மடம் ஶ்ரீகற்பக விநாயர் கோவில் சைவ சமய அபிவிருத்திக்கழகம் நடத்தும் சைவசமய அறிவுப் பரீட்சை இன்று காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதற்கென குடாநாட்டில் யாழ். இந்துக் கல்லூரி, கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை, யாழ்.இராமநாதன் கல்லூரி, தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி, இணுவில் இந்துக் கல்லூரி, சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம், நயினாதீவு மகா வித்தியாலயம், நயினாதீவு ஶ்ரீகணேச கனிஷ்ட வித்தியாலயம், கொட்டடி நமசிவாய வித்தியாலயம், கோப்பாய் நாவலர் வித்தியாலயம், புத்தூர் ஶ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி, அச்சுவேலி புனித திரேசா மகளிர் கல்லூரி, சுதுமலை சிந்மயபாரதி வித்தியாலயம், தெல்லிப்பளை யூனியன் கல்லூரி, காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகாவித்தியாலயம், வேலணை சேர். வைத்திலிங்கம் துரைசுவாமி வித்தியாலயம், ஆவரங்கால் நடராஜ இராமலிங்கம் வித்தியாலயம் ஆகியன பரீட்சை நிலையங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன.

தரம் 1 தொடக்கம் 13 வரையான வகுப்புகளைச் சேர்ந்த 4 ஆயிரத்து 300 மாணவர்கள் இந்தப் பரீட்சைக்குத் தோற்றவுள்ளனர்.

இவர்களுக்கான அனுமதி அட்டைகள் யாவும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகக் கழகத்தின் பரீட்சை செயலாளர் செ. சுப்பிரமணியம் அறிவித்துள்ளார்.

# தவக்கால நற்சிந்தனை



யேசுபார்வையற்றோருக்கு குணமளிக்கும் போது இருமுறை பார்வையற்றவரின் கண்களைத் தொட்டு குணமாக்குகிறார். இதன் மூலம் அவன் படிப்படியாகப் பார்வை பெற்றான். எவ்வாறு பார்வையற்றவர் படிப்படியாக அனைத்தையும் கண்டுகொள்ள முடிந்ததோ அவ்வாறே யேசுவின் சீடர்களும் அவரின் போதனைகளின் உள் அர்த்தத்தையும்,அவரது அருஞ்செயல்களின் குறிப்பையும் தெளிவாகக் கண்டுணர்ந்து அவரை மெசியா என ஏற்றுக் கொள்ளும் துணிவையும் உறுதியையும் பெற்றனர். இதன் விளைவாகவே பேதுரு யேசுவை மெசியா எனவும் அறிக்கையிட்டார். இப்புதுமையில் மூன்று நிலைகளில் பார்வையற்றவரைக் காண்கிறோம். அவர் நலமடைகிறார். முழுப் பார்வை பெறுகிறார். அனைத்தையும் தெளிவாகக் காண்கிறார். இறைவனின் பார்வையில் எந்தவொரு மனிதரையும் முழு மனிதனாகவே இறைவன் பார்க்கிறார். உடல் வேறு, உள்ளம் வேறு, ஆன்மா வேறு என்றல்ல. அவரின் போதனைகளும், அருஞ் செயல்களும் மனிதருக்குத் தரக்கூடிய முழு மனித விடுதலைக்கு, மீட்புக் குச் சான்றாக அமைகின்றன. இது நமக்கொரு வெளிப்பாடாக அமைய வேண்டும். சீடர்களின் அகக் கண்களைப் படிப்படியாகத் திறந்து செயற்படச் செய்ததுபோல நம்மிலும் அத்தகைய திறப்பு இடம்பெறவேண்டும். நமது மனமும் தீய வழிகளிலிருந்து விடுதலை பெறவேண்டும். இதன் முலம் ஆன்மாவும் ஈடேற்றம் அடைய வேண்டும் என்ற உயரிய நோக்கம் நம்மில் வளர வேண்டும்.

- மோ.தார்சீசியஸ்.

# அபிவிருத்தி திட்டப் பணிகளுக்கு வலி.மேற்கில் 10 கிராமங்கள் தெரிவு

சுதுமலை—

வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பிரிவில் பட்டினிக்கு எதிரான நிறுவனம் பத்துக் கிராமங்களை தெரிவு செய்து அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ளவுள்ளது.

தெரிவு செய்யப்பட்டுள்ள பத்து கிராமங்களிலும் இந்த வருடம் யூன் மாதம் தொடக்கம் 2007 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் வரையான காலப் பகுதிக்குள் பல்வேறு அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

சங்கானை மேற்கு, சங்கானை கிழக்கு, சுழிபுரம் கிழக்கு, பண்ணாகம், தொல்புரம் மேற்கு, அராலி வடக்கு, வட்டு தெற்கு, வட்டு கிழக்கு, சுழிபுரம் மேற்கு, சங்கானை மத்தி ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் இருந்தே பத்துக் கிராமங்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

கிராம அலுவலர் பிரிவுகளிலுள்ள சகல கிராமங்களிலும் பட்டினிக்கெதிரான நிறுவனம் தேவை மதிப்பீட்டை மேற்கொண்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (91)




ஜோசப் கிருஸ்ணாவின்

# நில் - கவனி - பின்வாங்கு


மல்கொம் ஸ்பீட் - காசேதான் கடவுளடா

எதைச் செய்தால் விளையாட்டுத் துறையின் வளர்ச்சிக்கு நல்லது என்பது ஒரு விடயம்.

எதையாவது செய்து விளையாட்டின் பெயரால் அதிகாரம் செலுத்த வேண்டும் என்று எண்ணுவது இன்னொரு விடயம்.

Ö í ICC தனது இரண்டு புது மைகளைச் செய்ய முயற்சித்து ஒன்றில் மூக் குடைபட்டுப் போய் இருக்கிறது.

அதுதான் Super sub இது பற்றிய சர்ச் சைகள் ஓய முன்பே இந்த முறைமை ஓய்ந்து விடும் போலத் தெரிகிறது.

அதோடு மெதுவாகச் செத்துவிடும் நிலைக் குப் போய்க் கொண்டிருப்பதும் தெரிகிறது. தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் தென்னாபிரிக்க - அவுஸ்ரேலிய ஒரு நாள் போட்டித் தொடரில் சட்ட விதிகளுக்கு அமைய ஒரு Super sub ஐ பெயரிட்டுவிட்டு அவரைப் பயன்படுத்தாமலே வழமையான பதினொரு பேருடன் விளையாட இந்த இரு அணிகளும் தீர்மானித்து அதன்படியே செய்தும் வருகின்றன.

Ö › MERCY MURDER இருக்க முடியாது. இந்தப் பெருமை றிக்கி பொண்டிங், கிரேம் ஸ்மித் இருவரையும் சாரும்.

Ö [ TWENTY 20ஆட்டம். இப்படி ஒரு ஆட்டத்தை உருவாக்கி கிரிக்கெட்டில் ஒரு விறுவிறுப்பை ஏற்படுத்த ICC முனைகிறது என்று கூறிக் கொண்டாலும் இது ICC பணம் பண்ண ஏற்படுத்தும் இன்னொரு வியூகம் என்றே பொதுவாகக் கருதப்படுகிறது.

மறு வகையில் 50 ஓவர்கள் ஆட்டத்தில் இல்லாத எந்தத் துடிப்பையும் TWENTY 20 கொண்டு வராது என்று ஏற்கனவே நிரூபிக்கப்பட்டு விட்டதாகவும் ஒரு கருத்து நிலவுகிறது.


சரத் பவர் - விலைக்கு வாங்க முடியாது


இந்த லட்சணத்தில் TWENTY 20 உலகக் கிண்ணப் போட்டி ஒன்றை நடத்த ICC தீர்மானித்திருப்பதாக செய்திகள் வருகின்றன. ஏற்கனவே இந்தவகை ஆட்டத்தின் மீதான வெறுப்பை றிக்கி பொண்டிங் வெளிப்படுத்தியிருந்தார்.

இப்பொழுது இந்த வகை உலகக் கிண்ணப் போட்டிகளில் தாங்கள் பங்கு கொள்ளத் தயாராக இல்லை என்று இந்திய , பாகிஸ்தான் நாடுகள் நெத்தியடி போட்டுவிட்டன.

எனவே ICC தான் என்ன செய்யப்போகிறோம் என்பதை முன்னதாகவே பலரின் கருத்துக்களையும் பெற்று ஆய்ந்தோய்ந்து பார்த்து அடியை எடுத்து வைத்தால் அது பதியும். இல்லாவிட்டால் வழுக்கும். பிறகு மீசையில் மண் படாக் கதைகள் கூறவேண்டியும் வரும். இந்த வகையில் பாகிஸ்தான் கிரிக்கெட் சபைத் தலைவர் சஹாரியார் கான் இந்திய கிரிக்கெட் சபைத்தலைவர் சரத்பவார் ஆகியோர் கம்பீரமாக உயர்ந்து நிற்கிறார்கள்.

மக்டலினின்

# என்றாலும் ஆயிரம் பொன்


சௌரவ் கங் கூலி - மன்னவனே அழலாமா?

இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் போட்டி களில் இந்திய அணியின் முன்னாள் இந்திய அணித் தலைவரும், அண்மையில் பாகிஸ் தான் சென்று வந்த இந்திய அணியில் இடம் பெற்றிருந்தவருமான சௌரவ் கங்கூலி இல்லை என்பது பலவித உணர்வலைகளை எழுப்பியுள்ளது. பத்திரிகைச் செய்திகளின் படி பார்த்தால், சௌரவ் கங்கூலி இடம் பெறாமல் போனமைக்கு இந்திய அணிப்பயிற்றுனர் கிறேக் செப்பலின் பிடிவாதமே காரணம் என்றும், இதற்கு தெரிவுக்குழுத்தலைவர் கிரண் மோரே அடி பணிந்து விட்டார் என்றும் தெரிய வருகிறது. அதோடு தான் இருக்கும் வரை கங்கூலிக்கு இடமில்லை என்றும் உறுதியாகக் கூறிவிட்டார்.

கிறேக் செப்பலின் வாக்குமூலத்தின் படி பார்த்தால் இளம் இரத்தத்தை அணியில் புகுத்த வேண்டும். அதாவது 2007 உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகளை மனதில் வைத்து இப்பொழுதே செயற்பட்டால் தான் உலகக் கிண்ணத்தை வெல்ல முடியும் என்றவாறு கருத்துக் கூறுவதாகத் தெரிகின்றது.

நோக்கர்களின் கருத்துப்படி பார்க்கும் போது இவையெல்லாவற்றுக்கும் மேலாக கிறேக் செப்பல் இந்திய அணித் தெரிவில் உத்தியோக பூர்வத் தெரிவாளர்களை விட ஆதிக்கம் மிகுந்தவராக மாறிவிட்டதாகக் கருதுகின்றார்கள். இதற்குக் காரணம் சௌரவ் கங்கூலி அண்மைக்காலமாக நடத்தப்பட்ட விதம் மட்டுமல்ல கிறேக் செப்பலே இந்தியக் கிரிக்கெட்டின் எல்லா விடயங்களிலும் கருத்துக் கூறவல்ல அதிகாரத்தைப் பெற்றுவிட்டவராக தோற்றம் பெற்றுவிட்டதுதான்.

இன்னொரு வகையில் இவரது செயற்பாடுகள் பம்பாய் சார்ந்த இந்தியக் கிரிக்கெட் சபைத் தலைவரையும் திருப்திப்படுத்தும் நோக்கில் நடந்து கொள்வது தனது அதிகாரத்துக்கு உறுதியாக இருக்கும் என்று நினைக்கிறாரோ தெரிய வில்லை. ஏனெனில் சச்சின், அகார்கர், றொமேஷ்ப வார், வாசிம் ஜாபர் போன்ற பம்பாய் வீரர்களுக்கு எப்பொழுதுமே ஒரு முன்னுரிமை இருப்பது போலவும் படுகின்றது.


ஷகீர் கான் - அடுத்த வரிசையில் நிற்கிறார்.

இங்குதான் உண்மையான பிரச்சினை தெரிகி றது. கங்கூலியின் இயல்புகள் வித்தியாசமானவை என்றாலும், அதற்கு மேலாக அவரது திறமைக்கு இன்னும் சந்தர்ப்பம் கொடுக்கப்பட்டிருக்க வேண்டும் என்பது பலரது கருத்து. பாகிஸ் தானில் இந்தியா டெஸ்ட் தொடரில் தோற்ற போதும் அந்த ஆட்டங்களில் கங்கூலி பலரை விடத் திறமை காட் டியிருந்தார் என்பது வெள்ளிடை மலை. எனவே தான் ஆஷஸ் வென்ற இங்கிலாந்து அணிக்கு எதிராக சௌரவ் கங் கூலியை கழட்டிவிட்டமை திட்டமிட்ட செயலாகவே தெரிகிறது.

இதேவேளை அனுபவம் மிகக் குறைந்த வாசிம் ஜாபர், பதினேழே வயதான பியூஸ் சவ்லா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளது ஆச்சரியமா கப் பார்க்கப்படுகின்றது. இன்னொரு புறம் சகீர் கான் கழறறப்பட்டிருப்பதும் ஆச்சரியமாகப் பார்க்கப்படுகின்றது.

எது எவ்வாறாயினும் அணியில் காலத்துக்குக் காலம் அணி மாற்றங்கள் ஏற்படுவது இயல்பானதே. என்றாலும், சௌரவ் கங்கூலிக்கு ஏற்பட்ட நிலைமை ஏதோ ஒரு வித்தி யாசமான அணுகு முறையாகவே தெரிகின்றது. யாரும் இல்லாமல் எதுவும் இல்லை என்பது பொய். என்றாலும் சிலருக்கு ஏற்படும் தாக்கம் நியாயப்படுத்த முடியாது என்பது மட்டும் உண்மை.

ஜெயராட்டின்

# வென்றவர் யாரோ?

இந்திய - இங்கிலாந்து முதலாவது டெஸ்ட் போட்டி முடிவடைந்து விட்டது. கிறேக் செப்பலின் வழிகாட்டலில் அதிஉயர் திறமையை வளர்த்துக் கொண்டிருக்கும் அணி என்று கருதப்படும் இந்திய அணி அது. அதோடு சொந்த மண்ணில் தோற்கடிக்கப்பட முடியாத அணி என்ற பெருமை யையும் தன்னுடன் கூட இணைத்துக் கொண் டது இந்திய அணி. மேலும் பல வீரர்களைக் கள மிறக்கி திறமைகளை அச்சொட்டாகக் கண்டு பிடித்து வடித்தெடுத்து களமிறக்கப்பட்ட அணி அது. எனவே இங்கிலாந்து ரொம்பவும் கஸ்டப் படப் போகிறது என்ற தொனியே தூக்கலாக இருந்தது.


அலிஸ்ரைர் குக் - முதல் மரியாதை

மறுபக்கம் சகோதர நாடான பாகிஸ்தானில் சில மாதங்களுக்கு முன் டெஸ்ட் தொடரைப் பறிகொடுத்த அணி இங்கிலாந்து அணி. இதெல் லாம் அடிப்படைக் காரணங்களாக இருக்க, இந் தியாவின் வெற்றி வாய்ப்பு உறுதிப்படுத்தப்பட இன்னொரு உடனடிக்காரணம் இருந்தது. அதுதான் முக்கியமானதும் கூட.

இங்கிலாந்து அணியில் அணித்தலைவர் மைக்கல் வோண் இல்லை. உபதலைவர் மார்க் ட்ரெஸ்கொதிக் இல்லை. நட்சத்திர சுழல் பந்து வீச்சாளர் ஆஸ்லி ஜைல்ஸ் இல்லை. வேகப் பந்து வீச்சாளர் சைமன் ஜோன்ஸ் இல்லை. இவர்கள் இல்லாமல் இங்கிலாந்து அணி இல்லை என்ற நிலையில் தான் அன்ட்ரூ பிளின் ரொப் தலைமையில் பல இளசுகளின் கூட்டமாக இங்கிலாந்து நாக்பூரில் களமிறங்கியது.

இந்த நிலையில் முதலாவது இனிங்ஸில் இங்கிலாந்து குவித்த 393 ஓட்டங்கள் இந்திய அணியின் உற்சாகத்தைப் பரிசோதிப்பதாகத் தான் இருந்திருக்கும். ஆனால் அந்த மாதிரி அணியான இந்தியா நானூற்றைம்பது ஓட்டங்க ளுக்கு மேல் குவிக்கும் என்று தான் எல்லோரும் எதிர்பார்த்தார்கள். ஆனால் 323 ஓட்டங்களுக்கு மேல் அதாவது இங்கிலாந்து அணியின் ஓட் டத்தை விட 70 ஓட்டங்கள் குறைவாக எடுக்க முடிந்தது.


அன்ரிவ் பிளின்ரொவ் - சுகமான ராகம்

இரண்டாவது இனிங் ஸில் முதல் இனிங்ஸில் ஆடிய அதே தரத்தில் இங்கிலாந்து அணி விளையாடி மீண்டும் கச்சிதமாக ரன்க ளைக் குவித்தது. 297 ஓட்டங்களை மூன்றே மூன்று விக்கெட்டு களை மட்டும் இழந்து பெற் றுக் கொண்டது. இந்த நிலையில் 368 ஓட்டங் களைப் பெற்றால் இந்தியா வுக்கு வெற்றி என்ற நிலை யில் 5ம் நாள் காலை களமிறங்கி நிதானமாகவே ஆட்டத்தைத் தொடங்கியது. ராவிட், வாசிம் ஜாபர் இருவரும் வெற்றி இலக்கை நோக்கும் எண்ணம் எதுவுமே இன்றி நிற்கும்வரை நிற்போம் பாணியில் ஆட்டத்தை முன் எடுத்துச் சென்றபோதும் ராவிட் திடீரென்று புதிய திசையில் நோக்கி இர்பான் பதான் டோனி, ஹர்பஜன், என்று இறக்கி ஒரு நாள் வீச்சொன்றைக் காட்ட முனைந்து, தடுமாற்றத்துக்கு உள்ளாகிப் போனார். இறுதியில் இந்திய அரண்கள் சச்சின், லக்ஸ்மன் ஆகியோரை இறக்க வேண்டிய நிலைக்கு உள்ளாகியது பரிதாபம். இந்தியா 260 ஓட்டங்களை மட்டும் பெற்று ஆறு விக்கெட்டுகளை இழந்தது அவ்வளவு மகிழ்ச்சியாக இல்லை. எனவே ஒட்டு மொத்தமாகப் பார்த்தால், புதிய சூழ்நிலை மிகவும் வெப்பமான காலநிலை, வழி நடத்த அனுபவம் நிறைந்த வீரர்கள் இல்லாத நிலையில் அன்ட்ரூ பிளின்ரொப் நாக்பூர் டெஸ்ட் போட்டியில் தனது களவியூகங்களால், தலைமைப் பண்புகளால் ஒரு தார்மீக வெற்றியைப் பெற்றுக் கொண்டார் என்று கூறலாம். நாக்பூர் வெப்பத்தில் இங்கிலாந்து வீரர்களின் முகம் சிவந்து போனதை ரசிகர்கள் அவதானித்திருப் பார்கள். ஆனால், இந்திய அணியின் முகமும் சிவந்துதான் போயிற்று. அது வெய்யில் கொடுமையால் அல்ல.

லிவிங்ஸ்ரனின்

# கேரளாவிலிருந்து ஒரு புயல்

சாந்தகுமாரன் சிறிசாந்த் இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் போட்டிகளில் விளையாட அழைக்கப்பட்டமை அவருக்குப் பெரும் மகிழ்ச்சி. சகீர்கான், அஜித் அகர்கர் போன்றோரை விட தெரிவாளர்களிடம் தன் திறமையை நிரூபித்து இந்திய டெஸ்ட் அணியில் இடம் , ½ Ý BREAK DANCE பட்டம் வென்றவர். இவரது பொழுதுபோக்கு கூடுதலாக இந்த வகை நடனம் ஆடுவதாக இருக்கிறது.

இவர் மலையாளத்தைத் தாய்மொழியாகக் கொண்டவர். அதற்குமேலாக ஆங்கிலம், ஹிந்தி, கன்னடம் போன்ற மொழிகளையும் சரளமாகப் பேசுவாராம். இவருக்கு ரேகை சாஸ்திரம், எண் சாஸ்திரம் போன்றவற்றில் நம்பிக்கை அதிகம். அததோடு சகுனம் பார்ப்பதிலும் அதிக நம்பிக்கை கொண்டவர். தத்துவத்துறைக் கல்வியை மேற்கொண்டுள்ள இவர் - நிறைய வாசிக்கும் பழக்கம் உள்ளவர். பந்து வீச வேகமாக ஓடி வரும்போது "தனக்குத்தானே பதட்டப்படாதே, நீதான் சிறந்தவன், கமோன்" என்று கூறிக்கொள்வோம்.


சிறீசாந்த் - இளமையின் புதுமை

இவர் மாணவனாக இருந்தபோது ஒருமுறை சச்சினைச் சந்திக்க முனைந்தபோது, பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் இவரைத் தடுக்கவே எனக்கு முன்பே சச்சினைத் தெரியும். எனது படிப்புச் செலவு முழுவதையும் அவர்தான் பொறுப்பேற்றுள்ளார் என்று ஒரு சிறு பொய் கூறி தனது ஆதர்ச புருசரைச் சந்தித்தாராம். இன்று சச்சினுடன் இணைந்து டெஸ்ட் போட்டிகளில் ஆடும் அதிஷ்டத்தைத் தன்திறமையால் பெற்றுக்கொண்டார்.

இங்கிலாந்துக்கு எதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் முதலாவது இனிங்சில் 95 ஓட்டங்களுக்கு நான்கு விக்கெட்டுகளை எடுத்து தன் திறமையை நிரூபித்துள்ளார். இந்திய அணித் தெரிவுப் பாணியில் இந்தத் திறமை நிறைந்த இளைஞன் எத்தனை நாள் தாக்குப் பிடிப் பாரோ? யார் அறிவார்.


மக்காயா என்ரினி - இதுதான் பதில்

விமலனின்


# அர்த்தமற்ற அர்ப்பணங்கள்


மார்க் பௌச்சர் - சிந்தனை சீரில்லை

அவுஸ்ரேலிய - தென்னாபிரிக்க அணிகளுக்கிடையே கேப்ரவுணில் நடைபெற்ற இரண்டாவது சர்வதேச ஒருநாள் போட்டியில் அவுஸ்ரேலிய அணி 196 ஓட்டங்களால் தோல்வியடைந்திருந்தது யாவரும் அறிந்த விடயம். இந்தப் போட்டியில் அவுஸ்ரேலிய அணி இத்தனை ஓட்டங்களால் தோல்வியைச் சந்தித்தது கூட ரசிகர்களுக்கு வியப்பைத் தந்திருக்காது. ஆனாலும் என்ரினியின் பந்து வீச்சைச் சமாளிக்க முடியாமல் 93 ஓட்டங்களுக்குள் ஆட்டமிழந்ததுதான் பலரது புருவங்களையும் உயர வைத்தது என்றால் அது மிகையில்லை.

டெஸ்ட் அந்தஸ்துப் பெற்ற 10 நாடுகளுள் சிம்பாப்வே, பங்களாதேஷ் அணிகள் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் மூன்றிலக்க ஓட்டங்களை எட்டுவதற்கே கடும் பிரயத்தனத்தை மேற்கொண்டு வந்தி ருக்கின்றன. ஏனைய நாடுகள் அங்கொன்றும் இங்கொன்றுமாக சில சந்தர்ப்பங்களில் இந்த நிலைக்கு ஆளாகியிருப்பதும் கடந்தகால கிரிக்கெட் வரலாற்றைப் புரட்டிப் பார்க்கும் தருணங்களில் கண்டு கொள்ளலாம்.

ஆனாலும் இவ்வாறான ஒரு நிலை உலக சம்பியனான அவுஸ் ரேலியர்களுக்கு ஏற்பட்டால் எவ்வாறு இருக்குமென்று ரசிகர்கள் அங்கலாய்த்திருப்பதும் உண்மைதான்.


டெஸ்மண்ட் டூட்டு - நிதர்சனத்தின் நிழல்

கேப்ரவுண் ஒருநாள் போட்டியில் தென்னாபிரிக்க அணி நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடி 290 ஓட்டங்களை அவுஸ்ரேலியாவுக்கு வெற்றி இலக்காக நிர்ணயித்தபோது - அதனை அவுஸ்ரேலியர்கள் அடையமாட்டார்கள் என்பதற்கான சாத்தியக்கூறுகள் எழவேயில்லை. ஏனென் றால் அவுஸ்ரேலிய அணி தனிநபர்களை என்றுமே சார்ந்திருப்பதில்லை என்பது யதார்த்தம். அதற்கமைய அணித்தலைவர் றிக்கி பொண்டிங் உபாதை காரணமாக ஒதுங்கிக் கொண்டாலும் அவுஸ்ரேலியர்களை இது பாதித்திருக்காது என்றே கொள்ள வேண்டும்.

இருப்பினும் அவுஸ்ரேலியாவில் நடைபெற்ற வி.பி கிண்ணத் தொடரில் காயம் காரணமாக ஆடாத மக்காயா என்ரினியினதும்,அன்ட்ரூ நெல்லினதும் மீள் பிரவேசம் - அதிஷ்டக் காற்றை தென்னாபிரிக்காவின் பக்கம் வீசச் செய்தது. அதிலும் மக்காயா என்ரினி 22 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுக்களை சரித்து அவுஸ்ரேலிய அணியை ஒரு உலுப்பு உலுக்கி அந்த அணியின் மோசமான தோல்விக்கு வழிசமைத்தார்.

இதேவேளை கேப்ரவுணில் நடைபெற்ற இந்த சர்வதேச ஒருநாள் போட்டியை தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை - தென்னாபிரிக்காவில் நிறவெறிக் கெதிராகப் போராடிய பேராயா டெஸ்மன்ட் டுட்டு வுக்கு சமர்ப்பணம் செய்வதாக அறிவித்திருந்தது. ஆனாலும் இந்த அங்கீகாரம் ஒருவித கேலித் தன்மையுடனேயே நோக்க வேண்டியிருக்கிறதென்றால் அது மிகையில்லை.

ஏனென்றால் அவுஸ்ரேலியாவில் தென்னாபிரிக்க அணி இனவாதக் கூச்சல்களால் பாதிக்கப்பட்டிருந்தமை கண்கூடான விடயம். அதற்கு கைமாறாக அவுஸ்ரேலிய அணி தென்னாபிரிக்காவில் கால் பதித்ததும் தென்னாபிரிக்க ரசிகர்கள் அவர்களுக்கு பதிலடி கொடுக்கவேண்டுமென - தென்னாபிரிக்க அணியின் விக்கெட் காப்பாளர் மார்க் பௌச்சர் கிரிக்கெட் பைபிள் என அழைக்கப்படும் விஸ்டன் சஞ்சிகைக்கு வழங்கிய ஒரு பேட்டியில் கருத்துக் கூறியிருந்தார்.

விளையாட்டை விளையாட்டாக ஆடினால் அது தவறில்லை.அதற்குள்ளும் இனவாத கூச்சல்கள் கொண்டு வரும் பட்சத்தில் அது விபரீத விளைவுகளுக்கே இட்டுச் செல்லும் என்பதில் சந்தேகம் இல்லை.

அந்த வகையில் பௌச்சரின் கருத்து எமக்கு ஏமாற்றத்தை அளிப்பதாக பொண்டிங் வெளியிட்ட கருத்தளவுக்குக்கூட கண்டனமோ,எதிர்ப்போ தெரிவிக்காத தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை- கேப்ரவுண் போட்டியை நிறவெறிக்கெதிராக போராடிய டெஸ்மன்ட்டுட்டுவுக்கு சமர்ப்பணம் செய்திருப்பது விநோதமான ஒரு செயலாகவே படுகிறதல்லவா?








தினசரி யாழ் - கொழும்பு விமான சேவை
ஒதுக்கீடுகளுக்கும் விமான பயணச்சீட்டுக்களுக்கும்
கொள்ளுப்பிட்டியில் - 011 2372 952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360 290 / 1
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891 / 6297, 0772 348888, 0772 349999
E-Mail : reservations@expoavi.com, jaffna@expoavi.com

# வவுனியாவில்-சிறைச்சாலை அமைப்பதற்கு நடவடிக்கை!

வவுனியா

வவுனியா மாவட்டத்தில் சிறைச்சாலை ஒன்றை அமைப்பதற்கு சிறைச்சாலை ஆணையாளர் இணக்கம் தெரிவித்துள்ளதாக, வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோர் தெரிவித்தார்.

வவுனியா மாவட்ட நீதிமன்றத்தால் தடுப்புக் காவல் உத்தரவு பிறப்பிக்கப்படும் போது - சந்தேக நபர்கள் அநுராதபுர சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்படுவதால், வவுனியாவில் வாழும் சந்தேக நபர்களின் உறவினர்கள் - அவர்களைச் சந்திக்க பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருவதாலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்தச் சிறைச்சாலை வவுனியா மாவட்ட நீதிமன்றத்துக்கு அருகாமையில் அமையவுள்ள அதேவேளை, 200 இற்கும் மேற்பட்ட கைதிகளைத் தடுத்து வைப்பதற்கான வசதிகளுடன் சிறைச்சாலை அமைக்கப்படும் எனத் தெரிவித்தார்.

இந்தச் சிறைச்சாலைக்கான அடிக்கல் நாட்டுவிழா எதிர்வரும் 20 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் சிறைச்சாலை உதவி ஆணையாளர் கலந்து கொள்ளவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

# புனர்வாழ்வு நிறுவனத்தால் கற்றல் உபகரணம் வழங்கல்

கிளிநொச்சி

கிளிநொச்சி மாவட்ட பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனத்தால் சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டுக் கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது.

தொண்டமாநகர் முன்பள்ளியில் கிளிநொச்சிப் பிரதேச இணைப்பாளர் ந.சிவரூபி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் - தொண்டமாநகர் கிராம மாணவர்களின் கல்விச் செயற்பாட்டை ஊக்குவிக்கும் வகையில் வறுமைக் கோட்டுக்குட்பட்ட 16 மாணவர்களுக்கு 50 கொப்பிகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் கிராமக் குழுக்கள், கிராம மக்கள், மாணவர்கள் பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (09)

## அடிக்கல் நாட்டுவிழா

வட்டக்கச்சி

ஜெயந்திநகர்ப் பிரதேசத்தில் முன்பள்ளிக்கான நிரந்தரக் கட்டடம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டு விழா - கடந்த புதன்கிழமை காலை 9 மணிக்கு நடைபெற்றது.

இந்த முன்பள்ளிக்கான அடிக்கல்லை கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராநாயகம் நாட்டிவைத்தார்.

இந்த முன்பள்ளி நிரந்தரக் கட்டடம் இன்றிக் கொட்டிலில் இயங்கி வந்தது. இந்தப்பகுதி வாழ் மக்கள்- அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள், பிரதேச சபை, ஆகியவற்றின் நிதிப் பங்களிப்புடன் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (09)

# கடற்தொழிலாளர்களுக்கு மீன்பிடி வலைகள் கையளிப்பு!




முல்லைத்தீவு

முல்லைத்தீவு மாவட்டத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவக் குடும்பங்களுக்கு நேற்று முன்தினம் நண்பகல் 1.00 மணியளவில் மீன்பிடி வலைகள் கையளிக்கும் நிகழ்வு நடைபெற்றது. கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் மரியராசா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வு மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பமாகியது.

இந்த நிகழ்வில் கருத்துரையை வண.பிதா அ.ஜெயக்குமார் அடிகளார் வழங்கினார்.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் சுனாமிக்குப் பின்னரான துரித புனர்வாழ்வு அபிவிருத்திச் சேவை நிகழ்ச்சித் திட்டத்துக்கமைவாக வழங்கப்பட்ட இந்த மீன்பிடி வலைகள் - தென்னிந்திய திருச்சபையின் நிதிப்பங்களிப்புடன் வழங்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

இன்றைய இந்த நிகழ்வில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் திட்டப் பணிப்பாளர் லோறன்ஸ் கிறிஸ்ரி, சுனாமிக்குப் பின்னரான துரித புனர்வாழ்வு அபிவிருத்திச் சேவை நிகழ்ச்சித் திட்டப் பிரிவின் நிர்வாக அலுவலகர் இ.றொபேட் மற்றும் பயனாளிகள் பொதுமக்களெனப் பலர் கலந்து கொண்டனர்.

# லெப்.கேணல் ஒஸ்கார் பயிற்சிப் பாசறையில் துணைப்படையின் முதலாவது பயிற்சி ஆரம்பம்



முல்லைத்தீவு

தமிழீழ கடற்படையின் கட்டளை அதிகாரி லெப். கேணல் ஒஸ்கார் (ஆதிமான்) பயிற்சிப் பாசறையின் சிறப்புத் துணைப்படையின் முதலாவது பயிற்சி முல்லைத்தீவுக் கடற்கரையில் நேற்றுமுன்தினம் ஆரம்பமாகியது.

பயிற்சியாளர் க.பாஸ்கரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் - தமிழீழ தேசியக் கொடியை தமிழீழ கடற்படையின் துணைத்தளபதி செழியன் ஏற்றி வைத்தார். தமிழீழ கடற்படையின் கொடியை கடற்புலிகளின் தளபதி மங்களேஸ் ஏற்றிவைத்தார்.

தமிழீழ கடற்படையின் கட்டளை அதிகாரி மாவீரர் லெப்.கேணல் ஒஸ்காரின் (ஆதிமான்) திருவுருவப் படத்துக்கான ஈகச்சுடரை, தமிழீழ கடற்படையின் தென் பிராந்தியத் தளபதி சிறிராம் ஏற்றி வைத்து மலர்மாலை அணிவித்தார்.

தலைமையுரையைத் தொடர்ந்து, சிறப்புரையை புலிகளின்குரல் பொறுப்பாளர் தமிழன்பன் நிகழ்த்தினார், ஆசியுரையை தமிழீழ கடற்படையின் சிறப்புத் ளதளபதி கேணல் சூசை வழங்கினார்.

# அடிப்படை வசதிகளின்றி இயங்கும் பூநகரி கோட்ட பாடசாலைகள்!

பூநகரி

கிளிநொச்சி - பூநகரி கோட்டத்தில் உள்ள பல பாடசாலைகள் பல்வேறு அடிப்படை சுகாதார வசதிகள் எதுவு மற்று இயங்கி வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

1935, 1944, 1960 ஆம் ஆண்டுகளிலும், அதற்குப் பின்னரும், ஆரம்பிக்கப்பட்ட பாடசாலைகளில் இந்தக் குறைபாடுகள் நிலவி வருகின்றன. இந்த பாடசாலைகளில் மலசல கூடங்கள் இருந்தும் அவற்றைப் பயன்படுத்த முடியாமல் இருப்பதாகவும், தமிழீழ சுகாதார சேவையின் பூநகரி பிரதேச இணைப்பாளர் மேற்கொண்ட ஆய்வின் போது இனம்காணப்பட்டது.

இந்தக் குறைபாடுகள் பெருமளவில் ஆரம்பப் பிரிவு பாடசாலைகளிலேயே காணப்படுகின்றன. இதனால் மாணவர்களும், ஆசிரியர்களும் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்தக் குறைபாடுகளால், தொற்று நோய்கள் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகத் தமிழீழ சுகாதார சேவையின் பூநகரி பிரதேச இணைப்பாளர் தெரிவித்துள்ளார்.

எனவே மாணவர்களினதும், ஆசிரியர்களினதும், நலனில் அக்கறை கொண்டு உரியவர்கள் செயற்பட வேண்டுமென இணைப்பாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (பூ)

## பொருட்கள் வழங்கல்

முல்லைத்தீவு

சுனாமி கடல் அனர்த்தால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்ட ஆசிரியர்களுக்கு இலங்கைத்தமிழர் ஆசிரியர் சங்கத்தால் உணவு மற்றும் உணவில்லாத பொருட்கள் வழங்கும் நிகழ்வு - இன்று காலை 8.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்த உணவுப்பொருளை பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் அனைவரும் பெற்று பயனடையுமாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (09)

# மலர்விழி பயிற்சிப் பாசறையில் பெண்களுக்கான பயிற்சி ஆரம்பம்

மன்னார்

மன்னார் இலுப்பைக்கடவைப் பிரதேசத்தில் இரண்டாம் லெப்டினன்ட் மலர்விழி பயிற்சிப் பாசறையின் பெண்கள் அணிக்கான பயற்சிகள் கடந்த புதன்கிழமை ஆரம்பமாகின.

இலுப்பைக்கடவைக் கோட்ட மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் கவிப்பிரியா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் - தமிழீழ தேசியக்கொடியை இலுப்பைக் கடவைக் கோட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் டென்சில் ஏற்றிவைத்தார்.

பயிற்சியாளர்களுக்கான பயிற்சியை இலுப்பைக்கடவைக் கோட்ட மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் கவிப்பிரியா ஆரம்பித்து வைத்தார். சிறப்புரையை தமிழீழ தேசிய எழுச்சிப் பேரவைப் பொதுச்செயலாளர் சஞ்சய் நிகழ்த்தினார். (பூ)

# உடனடி நடவடிக்கை குழுக்கள் அமைப்பு!

பூநகரி

தமிழீழ சுகாதார சேவையினரின் தொற்று நோய் தடுப்புப்பிரிவினரால் நோய், இயற்கை அனர்த்தங்கள் ஏற்படக்கூடிய பிரதேசங்களில் உடனடி நடவடிக்கைக் குழுக்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. இதன் முதற்செயற்பாடாக பூநகரி செட்டியார் தரைவெளியில் உடனடி நடவடிக்கைக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவின் தலைவராக இ.இராஜபோல்டன், செயலாளராக பா.தணிகாசலம், பொருளாளராக மி.மேரிறோஸ், ஆகியோரும், உறுப்பினர்களாக பதினான்கு பேரும் தெரிவுசெய்யப்பட்டனர். இந்தக் குழுவுக்கான இணைப்பாளராக தமிழீழ சுகாதார சேவைகளின் பூநகரிப் பிரதேச இணைப்பாளர் ஜீ. அரவிந்தன் கடமையாற்றுவார் எனத் தமிழீழ சுகாதார சேவையினர் தெரிவித்தனர்

# சித்த ஆயுர்வேத வைத்தியசாலை உருத்திரபுரத்தில் திறந்து வைப்பு

வட்டக்கச்சி

உருத்திரபுரம் கிழக்குப் பிரதேசத்தில் இலவச சித்த ஆயுள்வேத வைத்தியசாலை கடந்த புதன்கிழமை காலை 10 மணியளவில் திறந்து வைக்கப்பட்டது.

கரைச்சிப் பிரதேச விசேட ஆணையாளர் பொன். நித்தியானந்தம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் - மங்கள விளக்கை கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் பொன். நித்தியானந்தம், கரைச்சி தெற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தமிழீழ தேசியக் கொடியை மாவீரர் ஒருவரின் தந்தை ஏற்றிவைத்தார். பொதுச்சுடரை மூன்று மாவீரர்களின் தந்தை ஏற்றிவைத்தார்.

பெயர்ப்பலகையை உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கே.பால சுந்தரம் திரைநீக்கம் செய்துவைத்தார். வைத்தியசாலைக் கட்டடத்தை கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் தி.இராசநாயகம் நாடாவை வெட்டித் திறந்துவைத்தார்.

தலைமையுரையைத் தொடர்ந்து கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் தி.இராசநாயகம், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கே. பாலசுந்தரம், தமிழர் புனர்வாழ்வுக்கழகத் திட்டப்பணிப்பாளர் லோறன்ஸ் கிறிஸ்ரி, உரித்திரபுர கிராம முன்னேற்றச்சங்கப் பொருளாளர் கண்ணதாசன் ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

இந்த நிகழ்வில் - கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், தமிழர் புனர்வாழ்வுக்கழக திட்டப் பணிப்பாளர், பணியாளர்கள், கரைச்சிப்பிரதேச சபையினர் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (09)

# விவசாயிகளுக்கான கலந்துரையாடல்!

முல்லைத்தீவு

முல்லைத்தீவு மாவட்டத்தில் உடையார் கட்டுக்குளத்தின் கீழ் உள்ள விவசாயிகளுக்கான நெற்செய்கை தொடர்பான கலந்துரையாடல் - சுதந்திரபுரம் பொதுநோக்கு மண்டபத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

புதுக்குடியிருப்புப் பிரதேச செயலர் தயானந்தா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கருத்துரைகளை முல்லைத்தீவு அரச அதிபர் இமெல்டா சுகுமார், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தைச் சேர்ந்த ஆறுமுகம், விவசாயத்திணைக்கள அதிகாரிகள், பொறியியலாளர்கள் ஆகியோர் நிகழ்த்தினர்.

இந்த நிகழ்வில் உடையார்கட்டுத் தெற்கு, உடையார்கட்டு வடக்கு, சுதந்திரபுரம் ஆகிய பகுதிகளில் வாழும் விவசாயிகள் பலரும் கலந்து கொண்டனர். (பூ)

நமது ஈழநாடு

சிந்தனைக்கு -
ஊனைக் குறித்த உயிரெல்லாம் நான் என்னும்
நன்மை குறித்தது சால்பு. - திருக்குறள்

## நமது நோக்கு

# பறவைக் காய்ச்சல்!

உலகத்தையே உலுக்கி வரும் பறவைக்காய்ச்சல் பீதி இலங்கைத் தீவையும் விட்டு வைக்கவில்லை. அயல் நாடான இந்தியாவில் பறவைக்காய்ச்சல் நோய் இனங்காணப்பட்டதுமே - இலங்கையின் வட பகுதியில் பரவுவதற்கு அதிக வாய்ப்பிருப்பதாக அரச தரப்பில் எச்சரிக்கப்பட்டிருந்தது.

இதையடுத்து இலங்கையில் கோழிப்பண்ணை உற்பத்திகள் அனைத்துமே திடீர் வீழ்ச்சி கண்டன. இந்தியாவிலிருந்து கோழி சார் இறக்குமதிகள் நிறுத்தப்பட்டன. உள்ளூரில் கிலோ 240 ரூபா வரை விற்கப்பட்ட கோழி இறைச்சி 170 ரூபாவாக வீழ்ச்சி கண்டது.

தென்பகுதியில் முட்டை விலையும் பாதியாகியது. இதனால் கோழி உற்பத்திகளில் ஈடுபட்டிருக்கும் 75 ஆயிரம் பேரும், இவற்றின் விற்பனையாளர்கள் 2 லட்சம் பேரும் பாதிக்கப்பட்டிருப்பதாக புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

இலங்கையின் உள்ளூர் உற்பத்திகளில் கோழி உணவு உற்பத்தி என்பது மிகப்பெரிய பங்கை வகிப்பதுடன், பொருளாதாரத்திலும் கணிசமான இடத்தை வகிக்கிறது. இந்த நிலையில் - பறவைக்காய்ச்சல் பற்றிய பீதி கோழி உற்பத்தியாளர்களை மட்டுமன்றி - நாட்டின் பொருளாதாரத்தையே பாதிக்கச் செய்துவிட்டது.

யாழ்.குடாநாட்டிலும் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் கோழிப் பண்ணைகள் மூலம் தமது வருவாயைப் பெற்று வருகின்றன. கிராமங்களில் சில கோழிகளை வளர்த்து அவற்றின் வருமானத்தில் சீவியம் நடத்தும் குடும்பங்கள் ஏராளம்.

இவர்களின் எதிர்காலத்தையே இந்தப் பறவைக் காய்ச்சல் நோய் கேள்விக் குறியாக்கி விட்டுள்ளது.

முன்னர் பரபரப்பான எச்சரிக்கைகளை விடுத்து வந்த அரசாங்கம், இப்போது பறவைக்காய்ச்சல் நோய் இலங்கையில் பரவுவதற்கு வாய்ப்பில்லை என்கிறது.

இந்த விடயத்தில் இலங்கை அரசு பொறுப்பற்றதனமாக நடந்து கொள்கிறது என்பதுதான் உண்மை. இலங்கையில் பறவைக்காய்ச்சல் பரவியிருப்பது இனங்காணப்படாமலேயே எச்சரிக்கை விடுத்ததும் - பின்னர் அதை எந்த உறுதிப்படுத்தலும் இன்றி வாபஸ் பெற்றதும் விவேகமான செயலாகத் தெரியவில்லை.

அயல்நாடான இந்தியாவில் பறவைக்காய்ச்சல் பரவியதை அறிந்ததுடன் அது பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதென்பது வேறு - திடீர் எச்சரிக்கையை விடுத்து மக்களை குழப்புவது வேறு. இங்கே நடந்தது எச்சரிக்கை விடுத்து மக்களைக் குழப்பும் கைங்கரியமே.

இந்தக் குழப்பத்தின் விளைவாக, கோழி உற்பத்திகளை வாங்குவதில் மக்கள் பின்னடிக்கிறார்கள் என்பது ஒருபுறம் இருக்க - கோழிப் பண்ணை உற்பத்தியாளர்கள் தமது தொழிலைக் கைவிடும் நிலைக்குள்ளாகியிருக்கின்றனர்.

இப்போது - சுகாதார அமைச்சு கோழி இறைச்சியையோ, முட்டையையோ எந்தப் பயமும் இன்றிச் சாப்பிடலாம் எனக் கூறியுள்ளபோதும் - கோழிப் பண்ணையாளர்கள் தமது உற்பத்திகளைக் கைவிட்டுள்ளதால் நிலைமை தலைகீழ் மாற்றம் கண்டிருக்கிறது.

அரசாங்கம் நோயை இனங்காணாமல் விடுத்த அவசர எச்சரிக்கையின் விளைவு இது. ஆயிரக்கணக்கான என்ற சொல்லைத்தாண்டி இலட்சக்கணக்கான குடும்பங்களின் வாழ்வையே இது கேள்விக்குறியாக்கி விட்டிளளருக்கிறது.

பறவைக்காய்ச்சல் பீதியை ஒழிக்கும் பிரசார நடவடிக்கைகளை முன்னெடுக்க கோழிப் பண்ணையாளர்கள் முயற்சிப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்தப் பிரசாரம் என்பது - கோழியுணவுகளை எந்த அச்சமும் இன்றி சாப்பிடத்தூண்டுவதாக இருக்க வேண்டும்.


அதேவேளை, அவர்கள் பறவைக்காய்ச்சல் குறித்த விழிப்புணர்வையும் பெற்றிருக்க வேண்டும். நன்றாக வேகவைத்த கோழியுணவு மூலம் இந்த நோய் தொற்றாது என்ற உண்மை ஏராளமானோருக்குத் தெரியாதுள்ளதால்தான் இறைச்சி, முட்டையை வாங்குவோர் தொகை திடீர் வீழ்ச்சி கண்டது.

இலங்கையரின் உணவில் கோழி, முட்டையின் பங்கு அதிக செல்வாக்குச் செலுத்துவதால், பறவைக்காய்ச்சல் குறித்த வீண் பீதியும், வதந்திகளும் சனத்தொகையின் போசாக்கு நிலையையும் மாற்றியமைத்துவிடும்.

எனவே, பறவைக்காய்ச்சலை அறிவியல் பூர்வமாகக் கட்டுப்படுத்தவும் - அதேவேளை, உற்பத்திகள், நுகர்வுகளைப் பாதிக்காமல் இருக்கவும் அதற்குப் பொருத்தமான விழிப்புணர்வு நடவடிக்கைகள் எடுப்பது அவசியமாகிறது.

267, Navalar Road,
Jaffna.
T.P.021-2225107
Fax - 021 - 2223922
Web - www.eezhanaadu.com
email-eezhanaadu @ yahoo.com

## நாடும் நடப்பும்




நன்றி - த ஐலண்ட்

# பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்த முயன்ற பௌத்த பிக்குவுக்கு பிணை மறுப்பு

கொழும்பு

பௌத்த பிக்கு பயிற்சிபெற வந்த 8 வயதுச் சிறுவனைப் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்க முயற்சித்த புத்தகாயா விகாரையின் பௌத்த பிக்குவுக்கு பிணை மறுக்கப்பட்டுள்ளது.

கிகான் பிலப்பிட்டிய நீதிமன்றில் இந்த வழக்கின் விசாரணை நேற்று முன்தினம் நடைபெற்றது. நீதிமன்றில் ஆஜரான கிராண்ட்பாஸ் பொலிஸார் மனு ஒன்றைத் தாக்கல் செய்தனர்.

அரசியல் செல்வாக்கின் மூலம் கைது செய்யப்பட்ட பௌத்த பிக்கு பிணை பெற முயற்சிப்பதாகவும் பிணை அளித்தால் சாட்சியங்களை அது பாதிக்கும் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

வீரகெட்டியவைச் சேர்ந்த 8வயது நிரம்பிய புதிய பிக்குவை கைகளாலும், பொல்லு மற்றும் கயிற்றாலும் அடித்துத் துன்புறுத்தி பாலியல் வல்லுறவுக்குள்ளாக்க முயற்சித்தமைக்காக கொழும்பு புத்தகாயா விகாரையைச் சேர்ந்த சந்தேக நபரான சப்புகஸ்கந்த தம்மானந்த தேரரை கிராண்ட்பாஸ் பொலிஸார் கைது செய்தனர்.

கெலனிய பகுதி கோணவலவைச் சேர்ந்த அதாவுத அரசிங்க ரூபன் திர்லுக் தியாஸ் என்பவர் செய்த முறைப்பாட்டின் பேரில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன.

அதாவுத அரசிங்க ரூபன் திர்லுக் தியாஸ் - சுலைமான் தனியார் மருத்துவமனையில் மருந்துகள் வாங்குவதற்காக மார்ச் 4 ஆம் திகதி காத்திருந்தார். அப்போது கைதுசெய்யப்பட்டிருக்கும் பௌத்த பிக்கு, பாதிப்புக்குள்ளான இளம் பிக்குவை அழைத்து வந்தார்.

மேலும் இளம் பிக்குவின் முகம் வியர்த்திருந்ததோடு, கழுத்து மற்றும் பின்புறங்களில் காயங்கள் காணப்பட்டன. இது தொடர்பாக இளம் பிக்குவிடம் முறைப்பாட்டாளர் விசாரிக்க முற்பட்டபோது சந்தேக நபரான பௌத்த பிக்கு அதைத் தடுக்கும் முயற்சியில் ஈடுபட்ட அவர் மருந்துகள்கூட வாங்காமல் அங்கிருந்து தப்பிச்சென்று விட்டார்.

இதனால் சந்தேகமடைந்த முறைப்பாட்டாளர் கிராண்ட்பாஸ் பொலிஸாரிடம் தெரிவித்தார்.

இதைத்தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் புத்தகாயா விகாரையின் பௌத்த பிக்கு, இளம்பிக்குவை பாலியல் வல்லுறவு செய்தமை தெரியவந்தது. இளம்பிக்கு சத்தம் போட முயன்றபோது அவரது கழுத்தை நெரிக்கவும் சந்தேக நபரான புத்தகாயா விகாரையின் பௌத்த பிக்கு முயன்றுள்ளார்.

பாதிப்புக்குள்ளான இளம்பிக்குவின் தாயாரும் பொலிஸாரிடம் வாக்குமூலம் அளித்துள்ளார். பாதிக்கப்பட்ட பிக்குவுக்கு தொடர்ந்து கொழும்பு தேசிய மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. நீதித்துறை மருத்துவ அறிக்கையின்படி, அந்த இளம்பிக்கு வல்லுறவால் மனரீதியாகப் பாதிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

நீதித்துறையின் பிரதி மருத்துவ அதிகாரி ஏ.தயபால அளித்த மருத்துவ அறிக்கை நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டது. மேலும் இளம்பிக்குவின் பல் மற்றும் கண்களில் ஏற்பட்டிருக்கும் காயம் தொடர்பான மேலதிக மருத்துவ அறிக்கை பெற வேண்டியிருப்பதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

வழக்கு விசாரணையின் போது சந்தேக நபரான பௌத்த பிக்கு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார். எனினும், அவரது பிணை மனுவை நிராகரிக்குமாறு அரச சட்டத் தரணி சஞ்சய கமக கேட்டுக் கொண்டார்.

## 24 மணிநேர மின்சாரம்

ஊர்காவற்துறை

ஊர்காவற்றுறை பிரதேசத்துக்கு நாளை முதல் 24 மணிநேர மின்சார விநியோகம் நடைபெறவுள்ளதாக மின்சாரசபை அதிகாரியொருவர் தெரிவித்தார்.

இதுவரை காலமும் மேற்படி பிரதேசத்தில் காலை 10 மணிமுதல் மாலை 2 மணி வரை மட்டுமே மின்விநியோகம் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (110)

## ஆட்கடத்தலை விசாரித்த பொலிஸ் அதிகாரி மாற்றம்

கொழும்பு

விளையாட்டுத்துறை அமைச்சகத்தின் ஊடாகப் போலிக் கடவுச்சீட்டுக்கள் மூலம் நடத்தப்பட்ட ஆட்கடத்தல் மோசடியை விசாரித்த இரகசியப் பிரிவு பொலிஸ் அதிகாரி இடம் மாற்றப்பட்டுள்ளார்.

இந்தக் குற்றச்சாட்டில் விளையாட்டுத்துறை அமைச்சர் ஜீவன் குமாரதுங்கவுக்குத் தொடர்பிருப்பதாகச் செய்திகள் வெளியாகியிருந்தன.

இந்த நிலையில் விசாரணை அதிகாரி பொலிஸ் தலைமையகத்துக்கு மாற்றப்பட்டுள்ள விடயத்தில் செல்வாக்கான நபர்களுக்குத் தொடர்பிருக்கலாம் என்று கொழும்பு ஊடக வியலாளர்கள் கூறுகின்றனர்.

## கச்சதீவு உற்சவத்துக்கு பறவை இறைச்சிகளை எடுத்துச்செல்லத் தடை!

யாழ்ப்பாணம்

கச்சதீவுக்கு உற்சவத்துக்குச் செல்லும் பக்தர்கள் எவரும் பறவை இன உணவு வகைகளை எடுத்துச் செல்லக்கூடாது என ஊர்காவற்துறை சுகாதார வைத்திய அதிகாரி அறிவுறுத்தியுள்ளார்.

இந்தியாவிலிருந்து வரும் பக்தர்களும் இதனைக் கடுமையாகக் கடைப் பிடிக்க வேண்டும். இந்தியாவின் சில மாநிலங்களில் பறவைக்காய்ச்சல் நோய் ஏற்பட்டுள்ளதால் இந்த நடைமுறை தீவிரமாக அமுல்படுத்தப்பட்டிருக்கிறது.

கடந்த வருடம் கச்சதீவுக்கு இலங்கையைச் சேர்ந்த 518 பக்தர்களும், இந்தியாவைச் சேர்ந்த 826 பக்தர்களும் சென்றதாகவும் இந்த முறை இந்த தொகையைவிட அதிகரிக்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தடகளப் போட்டி

மானிப்பாய்

தெல்லிப்பழை கல்விக் கோட்டத்துக்கு உட்பட்ட பாடசாலைகளுக்கு இடையிலான தடகளப்போட்டி நிகழ்வுகள் இன்று பிற்பகல் 1.30 மணிக்கு தெல்லிப்பழை கோட்டக் கல்விப் பணிப்பாளர் ச.கைலாசநாதன் தலைமையில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் - வலிகாமம் கல்வி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.பாலசிங்கம் பிரதம விருந்தினராக் கலந்துகொள்ளவுள்ளார். (100)

## பிரியாவிடை நிகழ்வு

தெல்லிப்பழை

தெல்லிப்பழை தென்மேற்கு அஞ்சல் அலுவலகத்தில் உதவி தபால் அதிபராகக் கடமையாற்றி கிளிநொச்சி தபாலகத்துக்கு தபால் அதிபராகச் இடமாற்றம் பெற்றுச் சென்ற சோமசுந்தரத்தின் சேவையைப் பாராட்டி கௌரவிக்கும் பிரியாவிடை நிகழ்வு இன்று மாலை 5மணிக்கு கணேசா சன சமூக நிலையத்தில் நடைபெறவுள்ளதாக நிலையத்தலைவர் அறிவித்துள்ளார். (72)

## ஆங்கில இலக்கிய கருத்தரங்கு

மானிப்பாய்

யாழ்.ஜம்போ ஹாட்வெயர்ஸ்சின் அனுசரணையுடன் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி ஆங்கில இலக்கிய மன்றம் நடத்தும் மாபெரும் ஆங்கில இலக்கியக் கருத்தரங்கு இன்று யாழ். இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் - விரிவுரையாளர்களான எஸ்.தெய்வதவபாலன், எஸ்.பத்மநாதன், வி.பரந்தாமன், திருமதி கே.சிவாஜி, கெ.கண்ணதாஸ், எஸ். சுந்தரேஸ்வரன், எஸ்.சிறிதரசர்மா, திருமதி.எஸ். ஆனந்த குமாரசாமி ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (100)

# புரிதலும் புரிய வைத்தலும் இன்றைய காலத்தின் கட்டாயம்!

உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவோர், பரவாயில்லை என்று சொல்லுமளவுக்கு ஜெனிவாவில் பேசியதென்னவோ அறிக்கை விடுவதென்னவோ என்பதாகவுள்ளது - அரசாங்க தரப்பினருடைய நடவடிக்கைகள்.

தங்களைச் சமாதான விரும்பிகள், அமைதி வழியே தீர்வைக் காண்பவர்கள் என்றெல்லாம் பரப்புரை செய்யும் அரச தரப்பு - எப்படியாவது தமிழினத்தை அடக்கி ஆளலாமென்றே பார்க்கின்றது. இன்றைய நிலைமையில் அவர்கள் கையாளும் விடயம், பேசிக்கொண்டே தமிழரை பேச்சு மூச்சற்றவர்களாக்குவது தான்.

இதனை நேருக்கு நேர் போரிலோ, பேச்சிலோ முகம் கொடுக்காமல், மறைமுகமாக நின்று அல்லது கோடரிக் காம்புகளை வைத்து ஈழத்தமிழரையும், ஈழவிடுதலைப் போராட்டத்தையும் அழித்து விடுவதே தங்களின் முதலும் முக்கியமுமென்று செயற்பட்டு வரும் சிங்களப் பேரினவாத அரச தரப்பினர், இன்றும் அவர்களின் நயவஞ்சக எண்ணம் நிறைவேறும் என்றே எண்ணுகின்றனர்.


இந்த எண்ணம் உரிய போராட்டத்தின் முன் விரைவில் மண்டியிடப் போகின்றதென்பது உண்மை. இந்த நிலையை மிக விரைவாகக் கொண்டு வருவதற்கு மக்கள் தயாராகவும் அக்கறையுடையவர்களாகவும் இருப்பது அவசியம்.

இன்று மக்கள் மனதிலும் சரி, வெளிப்படையான பேச்சிலும் சரி இன்றிருக்கும் இந்த நிலைமையைப் பார்க்கிலும் போர் பரவாயில்லை என்று கூறுமளவிற்கு சமாதான காலம் படு பயங்கரமாக இருக்கின்றது. ஆகவே, இந்தச் சூழ்நிலையில் அரசியல் ரீதியாக சில பல வேலைகளுக்கு ஒழுங்குபடுத்துவதோ, விளக்குவதோ சிரமமானது தான். எனினும் விடா முயற்சியும், நம்பிக்கையும், உறுதியுமுள்ளது. முடிவு நிம்மதியான சுதந்திரமான வாழ்வுதான் என்பதை தொடர்ந்தும் எடுத்துரைக்க வேண்டும். சில சந்தர்ப்பங்களில் பட்ட துன்பங்களையே மறந்து சிலர் பேசுகின்றனர்.

குறிப்பாக ஓமந்தை முன்னரங்க சோதனைச் சாவடியில் சற்றுத் தாமதமானால் போராளிகளுடனும், பணியாளர்களுடனும் பயணிகள் சினங்கொள்கின்றனர். நீங்கள் படையினரைப் பார்க்கக் கடுமையாக நிற்கிறீர்களே எனவும் நொந்துகொள்கின்றனர். உரிமையுடன் தான் கேள்வி கேட்கின்றனர். கேள்வி எழுப்புவது தவறில்லை. ஆனால், சில ஆண்டுகளுக்கு முன் எவ்வாறு பயணம் செய்தோம் என்பதை மறந்து போனதை இதில் நாம் காணலாம்.

மடு -பிரமணாலங்குளம் ஊடாக விடுதலைப் புலிகளினால் விடுவிக்கப்பட்ட பகுதிக்குள்ளிருந்து படையினரின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிக்குள் மக்கள் வருவதென்றால் சிலவேளை மாதக்கணக்காகக் காத்திருந்து, வீதிகளிலும், மரங்களின் கீழும், பாடசாலைகளிலும் கடைகளின் முன்புறமாகவும் படுத்துறங்கி, பணச்செலவு செய்தும் பயணத்தைத் தொடர வழியின்றித் திரும்பியோர் ஏராளம்.

யாழ்.குடாநாட்டிலிருந்து வேறொரு நாட்டுக்குப் போவது போன்று கப்பல், விமானப் பயணம். அதற்கும் அனுமதி பெறுவதென்றால் சிலருக்கு முன் தவமிருக்க வேண்டும். இதேபோன்று வவுனியாவை விட்டு வெளிமாவட்டங்களுக்குச் செல்வோர் அனுமதி பெறுவதிலும் பார்க்க, கல்லில் நார் உரிக்கலாம். மன்னம்பிட்டி சோதனைச் சாவடியின் கதையைச் சுருங்கக் கூறுவதென்றால், நிர்வாணமாக்கிப் பார்ப்பது போன்று சோதனைக் கெடுபிடி. இவையெல்லாம் மறந்து போய்விட்டது.



இதனை மறப்பது - இன்று நிலைமைசீராகிவிட்டதென்றோ அல்லது இன்றிருப்பதுதான் எமது போராட்டத்தின் இலக்கு என்பதோ அல்ல. ஆகவே மறந்துபோனவற்றை நினைப்பதும், குழப்பமான புதிய எண்ணங்களின் தோற்றத்தை இல்லாமல் செய்வதும் இன்றைய அரசியல் சூழ் நிலை யில் கவனிக்கப்பட வேண்டியதே.

ஈழ விடுதலைப் போராட்டத்தின் ஆரம்பகாலத்தில் இருந்த உலகின் அரசியல் நிலைமைகள் இன்று மாறியுள்ளன. எனவே, இன்று எதிர்ப்பு இருக்கும் என்ற பொதுச் சிந்தனை - அரசி யல் செயற்பாடுகளில் காண்கின்ற போது, அதில் நிலைமைக் கேற்றவாறு மாற்றங்கள் செய்யப்படுவது தவிர்க்க முடியாததே. இதனைக் கருத்திற் கொண்டு மக்களுக்கு விளக்கம் கொடுப் பது மிகமிக அவசியமாகும்.

போர் மீண்டும் தீவிரமடையப் போகின்றதே என்றும், பின்னர் இன்னும் கொஞ்சக்காலத்துக்கு இன்றிருக்கும் நிலைமை தொடரும் என்றும், இல்லை - இல்லை இனிப்போர் மூளாது என்றும், போரால் தான் இனி முடிவு என்றும் பல பேச்சுக்கள் மக்கள் மத்தியில் அலைமோதுகின்றன.

இது யதார்த்தமானது. ஆனால், உண்மை என்ன? அதனை வெளிப்படையாகச் சில வேளை சொல்ல முடியாது போகலாம். ஆனால், விளங்கிக் கொள்ளக் கூடியதான வேலைத்திட்டங்களை முன் வைக்க முடியும்.

பாதுகாப்புக் கெடுபிடிகளைத் தொடர்ந்தும் ஏற்படுத்திக்கொண்டு இயல்பு நிலைமையினைக் கொண்டு வரமுடியாத நிலை தொடர்கின்ற போது , அதற்குள் சிக்கித் தவிக்கும் மக்கள் - பிச்சை வேண்டாம் நாயைப்பிடி என்று சொல்ல வேண்டுமென்றே சிங்கள பேரினவாத அரசு விரும்புகின்றது. எனவே சோர்வென்பது இருக்கக்கூடாது.

போராட்டத்தின் வெற்றி பலமானதை அடித்து நொருக்குவதும், பலவீனமான இடத்தால் நுழைந்து விளையாடுவதும் தான்.

மகிந்தவின் சிந்தனைக்குள் இந்திய அமெரிக்க சிந்தனைகளும் கவிழ்த்துக்கொட்டப்பட்டிருக்கலாம். எனவே, தற்போது தமிழர் தாயகத்தில் என்ன நடந்து கொண்டிருக்கின்றதென்பதை புரிந்து கொள்வதும், புரியவைப்பதும் காலத்தின் கட்டாயம்.

– கனகரவி –

# ஒப்புக்கொள்ள மறுப்பது ஏன்?



✦ மோட்டார் சைக்கிளில் தனது சகோதரியுடன் சென்ற மாணவனை இராணுவத்தினர் கடத்திச் சென்றதை நேரில் கண்ட மாணவர்கள் தெரிவித்த தகவலை அடுத்து, 512 ஆவது படைத் தலைமையகத்துக்குச் சென்ற மனித உரிமைகள் ஆணைக்குழு பிரதிநிதிகள் அந்த மாணவர்களை மீட்டனர்.

✦ பாடசாலை முடிந்து வீடு திரும்பிக் கொண்டிருந்த பாடசாலை மாணவர்களை வீதியோரமாக இருந்த பற்றைகளை வெட்டு[illegible] கடற்படையினர் பணித்தவேளை, அதற்கு மறுப்புத் தெரிவிக்கவே -அவர்கள் மீது கடற்படையினர் மேற்கொண்ட தாக்குதலில் மாணவன் ஒருவன் படுகாயமடைந்து, யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டார்.

✦ சாவகச்சேரி இந்துக்கல்லூரி அதிபர் மற்றும் மாணவர்கள் முகமாலை சோதனைச் சாவடியில் கடும் சோதனைக்குட்படுத்தப்பட்டனர்.

✦ புங்குடுதீவில் ஆசிரியர்கள் பயணித்த பஸ்ஸை வழி மறித்த படையினர் வழமைக்கு மாறாக கடும் சோதனைக்குட்படுத்தினர்.

இவையெல்லாம் கடந்த இரண்டு மாதங்க[illegible]ல் யாழ்.குடாநாட்டில் கல்விச் சமூகம் மீது படையினரால் மேற்கொள்ளப்பட்ட கொடூரமான வன்முறைகளாகும். படையினரின் இவ்வாறான நெருக்குவாரங்களுக்கு மத்தியில் மாணவர்கள் தமது இயல்பான கல்விச் செயற்பாட்டை எவ்வாறு மேற்கொள்வது?

எந்தவொரு பகுதியிலும் அடக்குமுறை என்று வரும் போது அதனை எதிர்த்து தமது எதிர்ப்பை, அடக்கப்பட்டவர்கள் வெளிக்காட்டுவதென்பது பொதுவான நடைமுறையாகும். இது இலங்கைக்கு மட்டும் புதியதல்ல. இலங்கையில் தமிழர்களின் விடுதலைப்போராட்டம் வீறுகொண்டெழுந்து இன்று சர்வதேச மயப்படுவதற்குக் காரணம், தமிழ் மக்களின் கல்வியில் மேற்கொள்ளப்பட்ட திட்டமிடப்பட்ட தரப்படுத்தலேயாகும்.

இந்த நிலையில், கடந்த இரண்டாம் திகதி யாழ். மாவட்டத்திலுள்ள 5 வலயக் கல்விப் பணிப்பாளர்களையும், மேலதிக கல்விப் பணிப்பாளர்களையும், பலாலி படைத்தளத்துக்கு அழைத்த யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதி - மாணவர்கள் எவரையும் அரசியல் ரீதியான செயற்பாடுகளில் அனுமதிக்கக் கூடாதெனக் கண்டிப்பான உத்தரவு பிறப்பித்துள்ளார்.

உண்மையில் படையினரால் பாதிக்கப்பட்ட மேற்படி மாணவர்கள் அரசியல் செயற்பாடுகளுக்கு சென்றதனாலா இம்சைக்குள்ளாக்கப்பட்டார்கள் என்பதனை படைத்தளபதி தெளிவுபடுத்துவாரா? வலயக்கல்விப் பணிப்பாளர்களுக்கு படைத்தளபதி விடுத்த உத்தரவைக் கண்டித்து உயர் தொழில்நுட்ப நிறுவன மாணவர்கள் மேற்கொண்ட எதிர்ப்பு நடவடிக்கைக்கு, மறுநாளான கடந்த ஆறாம் திகதி உயர் தொழில்நுட்ப வளாகப் பகுதிக்குள் அத்துமீறி நுழைந்த படையினர் அங்குள்ள தொலைபேசி இணைப்புக்களை அறுத்துச் சென்றதாகக் குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

ஏற்கனவே பல்வேறு வசதியீனங்களுடன் தமது கல்விச் செயற்பாட்டை மேற்கொண்டு வரும் தமிழ் மாணவர்கள் மீது படையினரின் இந்த நடவடிக்கைகள் முற்று முழுதாக அவர்களின் கல்விச் செயற்பாட்டை முடக்கும் செயற்பாட்டின் ஒரு அங்கமாகும்.

தென்னிலங்கையில் மாணவர்கள் இவ்வாறான எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டால், படையினர் இவ்வாறு செயற்படுவார்களா? உயர்பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில், வசதி வாய்ப்புக்களுடன் கூடிய பாடசாலைகள், அங்கிருக்கும் நிலையில் மக்கள் குடியிருக்கும் வீடுகளைப் பாடசாலைகளாக்கி, அதில் பல்வேறு வசதியீனங்களுடன் தமது கல்விச் செயற்பாட்டைத் தமிழ் மாணவர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

அத்துடன் உயர்பாதுகாப்பு வலயம் என்ற போர்வைக்குள் செயற்படும் ஒரு சில பாடசாலைக்கும் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் செல்வதும் படையினரின் பலத்த சோதனைக் கெடுபிடிகளுக்கு மத்தியில்தான். இவ்வாறு தமிழ் மாணவர்கள் பல்வேறு இன்னல்களுக்கு மத்தியில் தமது கல்விச் செயற்பாட்டை மேற்கொள்ளும்போது, படையினர் அவர்கள் மீது மேற்கொள்ளும் வன்முறைகள் கண்டிக்கத்தக்கது.

இந்த நிலையில், யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் கல்விச் செயற்பாட்டுக்கான புறச்சூழல் உருவாக்கப்படவேண்டுமெனக் கோரி தமது கல்விச் செயற்பாட்டை இடைநிறுத்தியது, எவரது செவிகளுக்கும் எட்டாத நிலையே இன்றுவரை காணப்படுகின்றது. எனினும், தம்மைச் சந்தித்த தமிழர் ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகளிடம் - பாடசாலைகளுக்கு அருகிலுள்ள இராணுவத்தினர் அகற்றப்பட்டு, பொலிஸார் நிறுத்தப்படுவரென்ற கல்வியமைச்சரின் உறுதிமொழிகூட காற்றில் பறந்ததாகவே உள்ளது.

சீனாவில் தியன்மென் சதுக்கத்தில் அரசுக்கெதிராக போராட்டம் நடத்திய மாணவர்கள் மீது - படையினரைக் கொண்டு அடக்கியதில் பெருமளவு மாணவர்கள் கொல்லப்பட்ட கறை இன்று வரை சீன அரசை உகை நாடுகளிடமிருந்து தள்ளியே வைத்துள்ளது. அதுபோன்று தமிழ் மாணவர்கள் மீது படையினரும் தமது வன்முறை களைக் கட்டவிழ்த்து விட்டுள்ளனரோ என்ற அச்சமே நாளாந்தம் நடக்கும் நிகழ்வுகளைப் பார்க்கும் போதும் ஏற்படுகின்றது.

இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு, சிறுவர்களை படைக்குச் சேர்த்தல் புலிகளின் பயங்கரவாத செயற்பாடுகளென தம்மை நீதிவான்களாக நிலைநிறுத்திக் கூறிவரும் சர்வதேச சமூகம், தமிழ் மாணவர்கள் மீது அரச படையினர் மேற்கொண்டு வரும் கண்மூடித்தனமான செயற்பாடுகளைக் கண்டும் காணாமல் இருப்பது ஏன்?

படையினரின் இவ்வாறான செயற்பாடுகளே மாணவர்களை அவர்களுக்கெதிரான நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தூண்டுகின்றன என்பதனை ஏன் சம்பந்தப்பட்டவர்கள் ஒப்புக்கொள்ள மறுக்கின்றனர்.

- கரன்


## ஊடகவியல் கற்கைநெறிக்கு தெரிவானோர் பெயர் விபரம்

யாழ்.பல்கலைக்கழக கலைப் பீட ஊடகவியல் முழுநேர கற்கை நெறிக்கு இந்த ஆண்டு 30 மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர் என யாழ். பல்கலைக்கழக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையப் பணிப்பாளர் பேராசிரியர் கலாநிதி அ.சண்முகதாஸ் தெரிவித்துள்ளார். அவர்களின் பெயர் விபரங்கள் வருமாறு.

| | | |
|---|---|---|
| சகாதேவன் நிருக்ஷன் | - | கொக்குவில் |
| யோகராசா கிஷானந் | - | அரியாலை |
| தியாகராசா நிரோஸ் | - | புத்தூர் |
| நடராசா திருவாணி | - | வரணி |
| விஜயகுமார் கஜேந்திரகுமார் | - | கோப்பாய் |
| சின்னத்தம்பி சாம்பவி | - | வரணி |
| வரப்பிரகாசம் ரெம்சி | - | ஆனைக்கோட்டை |
| தயாபரன் ரத்ஷன் | - | உரும்பிராய் |
| கணேசையா ஜெகந்தன் | - | கொடிகாமம் |
| திருநாவுக்கரவு ரேவதி | - | மிருசுவில் |
| செல்வரத்தினம் மேனகா | - | கொடிகாமம் |
| நாகராசா ஜமுனா | - | வரணி |
| மனோகரன் துவாரகா | - | கோண்டாவில் |
| மகேஸ்வரன் பிரசாத் | - | அல்வாய் |
| சாள்ஸ்அரியகுமார் ஜசிகரன் | - | பருத்தித்துறை |
| உதயகுமார் பிரியதாசினி | - | வரணி |
| குமாரகுலசிங்கம் ஜெயமாரன் | - | திருநெல்வேலி |
| காந்தன் பிரியங்கா | - | வரணி |
| காசிநாதன் டக்சிகா | - | திருநெல்வேலி |
| நல்லையா நிரோஷினி | - | மிருசுவில் |
| தவசீலன் சுகன்யா | - | யாழ்ப்பாணம் |
| அம்பலவாணர் யசோதா | - | கொடிகாமம் |
| ரவீந்தரன் நிர்மல் | - | கரவெட்டி |
| சுப்பிரமணியம சுவிதா | - | வரணி |
| சின்னராசா நிருஷா | - | வரணி |
| நடராசா வதனா | - | மிருசுவில் |
| ராஜதுரை ஜெயரூபன் | - | வரணி |
| வீரசிங்கம் ரேணுகா | - | வரணி |
| சற்குருநாதன் ஜெயவாணி | - | ஏழாலை |
| நீலயினார் சுதாநிவ்சனா | - | வரணி |

# தி.மு.க ஆட்சிக்கு வருவதை மக்கள் விரும்பவில்லை!

## திண்டிவனம் ராமமூர்த்தி



புதுவை—

எதிர்வரும் சட்டசபைத்தேர்தல் மூலம் தி.மு.க ஆட்சிக்குவர மக்கள் விரும்பமாட்டார்கள் என்று - திண்டிவனம் ராமமூர்த்தி புதுவையில் தெரிவித்தார்.

தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் கட்சித்தலைவர் திண்டிவனம் ராமமூர்த்தி நிருபர்களுக்கு பேட்டியளித்தார்.

அதில் அவர் கூறியதாவது:-

தி.மு.க கூட்டணியை யாராலும் அசைக்கமுடியாது என்று கருணாநிதி மாநாடு நடத்துவதற்குமுன் குறிப்பிட்டார். ஆனால், அந்தக்கூட்டணி தற்போது பிரிந்து சிதறுவதைப் பார்க்கிறோம்.

இதனால் தேர்தலில் இத்தனை இடங்கள்தான் கொடுக்கமுடியும் என்றவர் இப்போது தியாகத்துக்குத் தயார் என்கிறார். அப்படியிருந்தும் காங்கிரஸ் கட்சி 48 தொகுதிகளை மாத்திரமே பெறமுடிந்தது. இன்னும் உறுதியாக இருந்திருந்தால் காங்கிரஸுக்கு இதை விடக் கூடுதல் தொகுதிகள் கிடைத்திருக்கும்.

இதனால்தான் அகில இந்திய காங்கிரஸ் தனது செயற்பாட்டை காப்பாற்றிக் கொள்ளவேண்டும் என்கிறோம்.

அதேநிலை புதுவையிலும் ஏற்பட்டிருக்கிறது. மீண்டும் ஆட்சி அமைக்க புதுவையில் காங்கிரஸ் தனித்துப் போட்டியிட வேண்டும் என்று வலியுறுத்தி வருகின்றனர்.

தமிழகத்தில் தி.மு.க ஆட்சி அமைப்பதையோ, கருணாநிதி முதலமைச்சராவதையோ மக்கள் ஏற்கவில்லை. அதன் நிலைப்பாடுதான் தற்போது தி.மு.க இறங்கிவந்து கூட்டணி அமைக்க விரும்புகிறது.

அவர் பங்கேற்கும் எந்த ஆட்சியையும் மக்கள் ஏற்கமாட்டார்கள் என்பதையும், புதுவையில் அவர் ஆட்டிப் படைக்கும் நிலையையும் மாற்ற, எதிர்வரும் சட்டசபைத் தேர்தல் ஒரு பாடமாக அமையும் என அவர் மேலும் தெரிவித்தார்.




# வைகோ விலகியது வருத்தமளிக்கிறது!

## காங்கிரஸ் செய்தித் தொடர்பாளர்

சென்னை—

தமிழகத்தில் ஜனநாயக முற்போக்கு கூட்டணியில் இருந்து வைகோ விலகியது வருத்தம் அளிக்கிறது என்று - ஜெயந்தி நடராஜன் தெரிவித்தார்.

அகில இந்திய காங்கிரஸ் செய்தி தொடர்பாளர் ஜெயந்தி நடராஜன் சென்னையில் நிருபர்களுக்குப் பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:-

தமிழகத்தில் ஜனநாயக முற்போக்கு கூட்டணியில் இருந்து விலகிய ம.தி.மு.க பொது செயலாளர் வைகோ, மத்தியில் ஐக்கிய முற்போக்கு கூட்டணியில் நீடிப்பாரா என்பது குறித்து பரிசீலித்து முடிவு எடுக்கப்படும். வைகோ ஜனநாயக முற்போக்கு கூட்டணியில் இருந்து விலகியது வருத்தத்திற்குரியது என்பது எனது தனிப்பட்ட கருத்து எனத் தெரிவித்தார்.










# வலைப்பந்தாட்ட மத்தியஸ்தர் பரீட்சையில் சித்திபெற்றோர்!

யாழ்ப்பாணம்—

யாழ்.மாவட்ட வலைப்பந்தாட்ட சங்கத்தின் அனுசரணையில் - இலங்கை வலைப் பந்தாட்ட சங்கத்தால் நடத்தப்பட்ட மத்தியஸ்தர் எழுத்துப் பரீட்சையில் 127 பேர் பங்குபற்றி.அதில் 98 பேர் சித்தியடைந்துள்ளனர். இதில் 'ஏ' தரத்தில் 3 பேரும், 'பி' தரத்தில் 7 பேரும், 'சி' தரத்தில் 88 பேரும் சித்தியடைந்துள்ளனர். அவர்களின் பெயர் விபரமும், புள்ளிகளும் வருமாறு:-

'ஏ தரத்தில் திருமதி ஏ.எவ்.ரூபசிங்கம் - 90 புள்ளி (யாழ்ப்பாணம்), செல்வி.ராதை அருளம்பலம் - 90 புள்ளி (அரியாலை) , செல்வி சுரேந்தினி சிதம்பரநாதன் - 90 புள்ளி (அரியாலை)

'பி' தரத்தில் திருமதி ஜெ.சரவணபவ ஐயர் - 94 (கொக்குவில்), எஸ்.அகிலன் - 89 (யாழ்ப்பாணம்), யு.குணநேசன் 85 (உரும்பிராய்), செல்வி கே.பாலசிங்கம் - 85 (உடுப்பிட்டி), க.கனகராஜா - 85 (நெல்லியடி), திருமதி பி.அகிலன் - 85 (யாழ்ப்பாணம்), யூலி.பிரகாசராசா - 85 (யாழ்ப்பாணம்)

'சி' தரத்தில் கே.நாகேஸ்வரன் -77 (யாழ்ப்பாணம்), என்.முகுந்தன் - 83 (முல்லைத்தீவு), எஸ்.நிசாந்தன் - 80 (மானிப்பாய்), ரி.வினோதன் -89 (மிருசுவில்), பி.தினேஸ்குமார் - 91 (தொண்டமானாறு), பி.தேவகுமார் - 89 (சாவகச்சேரி), கே.சுதாகர் - 80 (இடைக்காடு), எம்.சுகந்தன் -89 (கிளிநொச்சி), எஸ்.சர்மிளா - 82 (கிளிநொச்சி), ரி.ரமணி - 75 (வட்டுக்கோட்டை), எஸ்.ரூபகாந்தன் - 75 (கரவெட்டி), ரி.சுரேஸ்குமார் - 80 (விஸ்வமடு), என்.விஜயநந்தன் - 86 (சுன்னாகம்), ஏ.பிரபாகரன் - 80 (முல்லைத்தீவு) -

கே.ரீகன் - 91 (சாவகச்சேரி), ஏ.ருபவர்மன் - 87 (வல்வெட்டித்துறை), ஜே.சுதாகர் - 96 (முல்லைத்தீவு), செ.நிரஞ்சனா - 87 (மீசாலை), பி.நாகலோஜினி - 92 (சித்தன்கேணி), கே.மயூரன் - 95 (கிளிநொச்சி), ரி.குமார் - 91 (தொண்டமனாறு), ஏ.கமலகுமாரன் - 92 (புத்தூர்), கே.கிருபாநந்தன் - 81 (புத்தூர்), கே.கமலேஸ்வரன் - 86 (கிளிநொச்சி) -

ப.கஜிதா - 87 (அல்வாய்), எஸ்.ஜெயசிறி - 82 (நயினாதீவு) பி.ஜி.இன்பராஜ் - 88 (கிளிநொச்சி), ஆர்.அனுசியா ராதாமணி - 89 (கரவெட்டி), ஏ.அனுசன் - 75 (வட்டுக்கோட்டை), கே.பிரசாத் - 83 (கரவெட்டி), பி.டெய்சி - 88 (வவுனியா), கரன் - 95 (கிளிநொச்சி), எஸ்.பிரபாகரன் - 89 (கிளிநொச்சி), பி.ஐங்கரன் - 78 (கிளிநொச்சி), எஸ்.சாந்தரூபி - 90 (பரந்தன்) -

கனிஷ்டா செபமலர் - 83 (மன்னார்), எஸ்.சுகிதர் - 83 (சுன்னாகம்), ரி.தவச்செல்வன் - 88 (உடுப்பிட்டி), பி.தயாளினி - 86 (சித்தன்கேணி), பி.சிவாஜினி - 79 (சுழிபுரம்), எஸ்.சிவபாலசந்தர் - 84 (அரியாலை), எஸ்.சுரேஸ்குமார் - 88 (யாழ்ப்பாணம்), ஆர்.பத்மகுமார் - 89 (உருத்திரபுரம்), எம்.ஓம்பிரசாத் - 75 (யாழ்ப்பாணம்), எஸ்.கௌதமன் - 75 (அல்வாய்) -

எஸ்.செந்தூரன் - 88 (தெல்லிப்பழை), கே.யோகேஸ்வரி - 84 (யாழ்ப்பாணம்), ஐ.சசிக்குமார் - 89 (மானிப்பாய்), ரி.நாகநாதன் - 76 (இளவாலை), ஏ.தம்பிராஜா - 75 (திருநெல்வேலி), கே.திலகேஸ்வரி - 80 (கோப்பாய்), எஸ்.மேரி அல்போன்சா - 78 (பளை), ஆர்.சுசில் - 90 (மன்னார்), ஹரிசாந் - 80 (யாழ்ப்பாணம்), வை.சிறிசோபனா - 87 (வட்டுக்கோட்டை), அனுஷ்டதாஸ் - 75 (மாதகல்), வி.விமலன் - 82 (அல்வாய்), ஜெ.தினேஸ் - 75 (யாழ்ப்பாணம்) -

கே.ஜனகன் - 81 (கொடிகாமம்), இன்பதாசன் - 82 (சுன்னாகம்), ரி.சசிகரன் - 80 (முல்லைத்தீவு), எஸ்.ரூபேந்திரன் - 75 (யாழ்ப்பாணம்), கே.அகிலா - 86 (மானிப்பாய்), பி.ஜெயகரன் - 87 (கரணவாய்), ஆர்.கஜமுகன் - 78 (மல்லாகம்), ஹரிகரன் - 78 (இளவாலை), எஸ்.சுவேந்திரன் - 86 (கரவெட்டி), ஜெ.யாழினி - 86 (பண்டத்தரிப்பு) -

எஸ்.உதயணன் 82 - (அல்வாய்), ரி.லோகநந்தினி - 75 (கரவெட்டி), ஆர்.ரஜீஸ் - 82 (மன்னார்), ஏ.முகுந்தன் -91 (சாவகச்சேரி), பி.ரதிதேவி - 86 (மன்னார்), எஸ்.மடோனா - 79 (யாழ்ப்பாணம்), ஆர்.கே.சாம்சன் - 87 (பண்டத்தரிப்பு), ஜே.சுகன்யா - 75 (அல்வாய்), கே.செந்திகா - 76 (சாவகச்சேரி), கே.கார்த்திகா - 82 (சாவகச்சேரி) -

கே.கற்பகரூபி - 79 (நயினாதீவு), எஸ்.சதீஸ்கண்ணா - 84 (சண்டிலிப்பாய்), பி.தணிகைவேள் - 85 (அல்வாய்), பி.சசிகரன் - 85 (கரவெட்டி), எம்.டி.விஜயகுமார் - 78 (இளவாலை), எஸ்.தேவலிங்கம் - 84 (கோண்டாவில்), எம்.மதிவதனன் - 81 (பருத்தித்துறை), பி.ரோகினி - 88, ரி.சாமினி - 75 (ஆனைக்கோட்டை) என்.சிவராஜா - 77 (யாழ்ப்பாணம்) ஆகியோர் வலைப்பந்தாட்ட மத்தியஸ்தர் எழுத்துப பரீட்சையில் சித்தியடைந்துள்ளனர் என யாழ்.மாவட்ட வலைப்பந்தாட்ட சங்கத் தலைவி ரூபசிங்கம் தெரிவித்துள்ளார். (12)




உங்கள் சேமிப்புக்கு அதிக ஆதாயம்!

மேலும் மேலும் அதிகமாகச் சேமிக்கும் அனைவருக்கும்!

கொமர்ஷல் வங்கியின் COMLEAP

உயர்ந்த மீதிக்கு உயர்ந்த வட்டி

- நாளாந்த கணக்கு மீதிக்கு வட்டி கணக்கிடப்பட்டு மதாந்தம் வரவிலிடப்படும்.
- எந்நேரமும் கணக்கிலிருந்து பணத்தை மீளப்பெற முடியும்.
- இலங்கை பூராகவும் அதிகமாக பாவனையில் உள்ள மிகப்பரந்த ATM வலையமைப்பில் உபயோகிக்கக்கூடிய CAT கார்ட் ஒன்றையும் பெற்றுக்கொள்ள முடியும். நாளாந்த மீள்பெறுகை ரூபா 40,000/- மட்டுமே.
- மாதாந்த கணக்கு கூற்றை உங்களுடைய வீட்டிற்கே, தபால் மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.
- கணக்கில் உள்ள மீதிக்கு எதிராக கடன் வசதிகளை பெற்றுக்கொள்ள முடியும்.
- காசோலைகளையும் இக்கணக்கில் வைப்பு செய்ய முடியும் (முன் அறிவித்தலுடன் மேற்கொள்ள முடியும்)

இக்கணக்கை எந்தவொரு கொமர்ஷல் வங்கிக் கிளையிலோ, சேவை நிலையங்களிலோ, மினிகொம் நிலையங்களிலோ அல்லது ஆர்பிக்கோ சேவை நிலையங்களிலோ ஆரம்பிக்க முடியும்.

அதே மாதிரி www.combank.net என்ற இணையத் தளத்தில் விண்ணப்ப படிவத்தை பெற்றுக் கொள்ளவும் முடியும்.

Q&E

சிதறுண்டால் மதிப்பு குறையும் - ஒன்று சேர்ந்தால் மதிப்பு உயரும்

Fitch தரப்படுத்தலில் AA+ (Sri) தரம் பெற்ற வங்கி

COMLEAP உயர்ந்த மீதிக்கு உயர்ந்த வட்டி

கொமர்ஷல் வங்கி உங்கள் நலமே எங்கள் நோக்கம்

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# சுதந்திரக்கட்சியின் எதிர்காலம்; லண்டனில் இரகசியப் பேச்சு!

கொழும்பு—
லண்டனுக்குச் சென்றுள்ள முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் எதிர்காலம் தொடர்பாக மிகவும் இரகசியமான பலசுற்றுப் பேச்சுக்களை நடத்துவதற்கு தீர்மானித்துள்ளார்.

இந்தப் பேச்சுவார்த்தையில் வெளியுறவு அமைச்சர் மங்கள சமரவீரவும் கலந்து கொள்ளவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இதன்படி கடந்த 9ஆம் திகதி உத்தியோக பூர்வ விஜயமாக லண்டன் சென்ற அமைச்சர் சமரவீர, தனது பயண நோக்கத்தை நிறைவு செய்த பின்னர் சந்திரிகாவை சந்திக்கவுள்ளார்.

அத்துடன் ஜேர்மனிக்கு தற்போது உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ள சுற்றுலாத்துறை அமைச்சர் அனுர பண்டாரநாயக்க எதிர்வரும் 15ஆம் திகதி லண்டனுக்குச் சென்று சந்திரிகாவைச் சந்தித்து கட்சியின் எதிர்காலத் திட்டங்கள் தொடர்பாக பேசவுள்ளார்.

அனுர பண்டாரநாயக்க சந்திரிகாவை சந்திப்பதற்கு முன்னர், மங்கள சமரவீரவை சந்தித்துப் பேச்சு நடத்தத் திட்டமிட்டுள்ளார். நீண்ட காலத்தின் பின்னர் அனுர பண்டாரநாயக்கவும், மங்கள சமரவீரவும் சந்தித்து கலந்துரையாடவுள்ளனர்.

முன்னர் சந்திரிகாவுக்கு மிகவும் நெருங்கியவராக இருந்த மங்கள சமரவீர, மகிந்தராஜபக்ஷ ஜனாதிபதி வேட்பாளராக அறிவிக்கப்பட்ட பின்னர், அவரது வெற்றிக்காக கடுமையாகப் பாடுபட்டார். ஜே.வி.பிக்கு முன்னுரிமை அளித்த விடயத்தில் சந்திரிகாவுக்கும், மங்கள சமரவீரவுக்குமிடையே விரிசல் ஏற்பட்டிருந்தது.

எனினும் அண்மைக்காலமாக மங்கள சமரவீர, சந்திரிகாவின் உரிமைகள் தொடர்பாக சுதந்திரக் கட்சிக்குள் குரலெழுப்புவதில் முன்னணி வகிக்கிறார். (தே)

# ஜிகாத் குறித்த குற்றச்சாட்டை அரசு தோற்கடிக்க வேண்டுமாம்!

## ரவூப் ஹக்கீம் கோரிக்கை

கொழும்பு—
கிழக்கு மாகாணத்தில் ஜிகாத் ஆயுதக்குழு செயற்படுவதாக விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ள குற்றச்சாட்டை - அடுத்த சுற்றுப் பேச்சுக்களின்போது தோற்கடிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உட்பட அரசின் பேச்சுவார்த்தைக்குழுவின் பிரதிநிதிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஜெனிவா பேச்சுக்களின் விபரங்களைத் தெரிவிப்பதற்காக கடந்த 6ஆம் திகதி ஜனாதிபதி மகிந்தராஜபக்ஷ தலைமையில், ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற சர்வகட்சி மாநாட்டிலேயே ஹக்கீம் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கருத்து தெரிவிக்கையில் -

கிழக்கு மாகாணத்தில் ஜிகாத் ஆயுதக்குழு செயற்படுவதாக விடுதலைப்புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், ஜெனிவாப்பேச்சில் தெரிவித்த கருத்து ஆதாரமற்றது. இதனை முஸ்லிம் காங்கிரஸ் வன்மையாக கண்டிக்கிறது. முஸ்லிம்கள் ஆயுதசெயற்பாட்டில் நம்பிக்கை வைத்து நடவடிக்கை எதுவும் எடுப்பதில்லை.

அடுத்த சுற்றுப்பேச்சுவார்த்தையில் முஸ்லிம் பிரதிநிதிகள் தனித்தரப்பாக பங்கேற்க வழிவகை செய்ய வேண்டுமெனவும் அவர் தெரிவித்தார். (தே)

# கதிர்காமர் கொலை வழக்கு; சந்தேக நபருக்கு பிணை!

கொழும்பு—
வெளிவிவகார அமைச்சர் கதிர்காமரின் கொலை வழக்கிலிருந்து சந்தேகநபரான சிவராமன் சிவரஞ்சன் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

அவரை 5 லட்ச ரூபா பிணையில் விடுவிக்குமாறு கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி சரோஜினி குசலா வீர வ[illegible]த்தன உத்தரவிட்டார்.

சந்தேகநபருடன் கைதுசெய்யப்பட்ட காளிமுத்து திருக்குமார் என்பவர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி அவரையும் பிணையில் விடுவிக்குமாறு கோரினார்.

இதனையடுத்து இந்த வழக்கில் கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினரிடம் கைதுசெய்யப்பட்டுள்ளவர்கள் தொடர்பாக எடுக்கப்படவுள்ள நடவடிக்கைகள் என்ன என்றும் நீதிபதி கேள்வி எழுப்பினார்.

கொலை தொடர்பான விசாரணைகள் நிறைவடையவில்லை என்று தெரிவித்த கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினர் சந்தேகநபர்கள் மீதான நடவடிக்கைகள் தொடர்பாக சட்டமா அதிபரின் ஆலோசனைகளைப் பெறவுள்ளதாகத் தெரிவித்தனர்.

சட்டமா அதிபரின் ஆலோசனைக்கமைய வழக்குத் தொடர்வதற்கு போதிய சாட்சியங்கள் இருப்பதாகவும் கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினர் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக கைதுசெய்யப்பட்டுள்ள ஐவரும் பாதுகாப்புக் காரணங்களுக்காக நீதிமன்றத்துக்கு அழைத்துவரப்படவில்லை.

சிவராமன் சிவரஞ்சன் மற்றும் காளிமுத்து திருக்குமார் ஆகிய இருவர் மட்டுமே நீதிமன்றம் அழைத்து வரப்பட்டிருந்தனர்.

இந்தக் கொலை தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ள தமிழ் இனியன் என்பவரிடமிருந்து கைப்பற்றப்பட்ட டிஜிட்டல் கமராவிலிருந்து எடுக்கப்பட்ட புகைப்படங்கள் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் தாக்கல்செய்யப்பட்டுள்ளதாகவும் இதுவரை மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் அவர்களுக்கு எதிராக வழக்குத் தொடர்வதற்கு போதுமான சாட்சியங்கள் உள்ளதாக தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பிணையில் விடுதலையாகும் சிவராமன் சிவரஞ்சன் மே மாதம் 19 ஆம் திகதி நீதிமன்றத்தின் முன் ஆஜராக வேண்டும் என்றும், இதர சந்தேக நபர்களை எதிர்வரும் 24 ஆம் திகதி வரை விளக்கமறிய லில் வைக்கவும் நீதிபதி உத்தரவிட்டார்.

# குண்டு வெடிப்பில் வயோதிபர் பலி!

கொழும்பு
எம்பிலிப்பிட்டிய உடுகம பானமுர பிரதேசத்தில் நேற்று நண்பகல் 12.30மணியளவில் நடைபெற்ற கைக்குண்டு வெடிப்பில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

பானமுர பிரதேசத்தைச் சேர்ந்த 67வயதுடைய நபர் ஒருவர் இந்த கைக்குண்டைக் கண்டெடுத்து அதனை பரிசோதித்துப் பார்த்தபோது அது வெடித்ததில் சம்பவ இடத்திலேயே பலியானார். இந்தக் கைக்குண்டு வெளிநாட்டுத் தயாரிப்பு என்று கூறப்படுகின்றது.

# தொண்டமனாறு கிழக்கில் மீன்பிடிக்க அனுமதி!

கொழும்பு—
தொண்டமானாறு கிழக்கு கடற்பகுதியில் கடற்தொழிலில் ஈடுபட விதிக்கப்பட்டிருந்த தடை நேற்று முதல் நீக்கப்பட்டுள்ளதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க தெரிவித்தார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் உத்தரவையடுத்து இந்தத் தடையுத்தரவு நீக்கப்பட்டதாகவும் தெரிவித்தார்.

கடந்த டிசெம்பர், ஜனவரி மாதங்களில் படையினர் மீது தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டதால் இந்தக் கடற்பிரதேசத்தில் கடற்தொழிலில் ஈடுபட தடைவிதிக்கப்பட்டிருந்ததாகவும் இராணுவப் பேச்சாளர் மேலும் குறிப்பிட்டார்.

# கட்சி செயலாளர்களுடன் தேர்தல் ஆணையாளர் சந்திப்பு

கொழும்பு—
உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பாக தேர்தலில் போட்டியிடும் அரசியல் கட்சிகளின் செயலாளர்களுக்கும், தேர்தல் ஆணையாளருக்கும் இடையிலான சந்திப்பு தேர்தல் செயலாளர் அலுவலகத்தில் நாளை காலை 10 மணியளவில் நடைபெறவுள்ளது.

தேர்தல் பிரசார நடவடிக்கைகளை மேற்கொள்ளும் முறை, தேர்தல் சட்டத்தை அமுல்படுத்தும் முறை, பதிவு செய்யப்பட்ட கட்சிகளிடையிலான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் ஆகியன குறித்து இந்தச் சந்திப்பில் ஆராயப்படவுள்ளதாத் தெரியவருகிறது.

இதேவேளை, தேர்தல் சட்டத்தை மீறி வன்முறைகளில் ஈடுபடும் எவரையும் கட்சிபேதமின்றி கைது செய்து கடும் நடவடிக்கை எடுக்கவுள்ளதாக பொலிஸ் மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ தெரிவித்தார்.

தேர்தல் நெருங்குகையில் பல்வேறு பிரதேசங்களிலும் வன்முறைகள் அதிகரித்திருப்பதாகவும், தேர்தல் விதிகளை மீறும் செயல்கள் அதிகரித்திருப்பதாகவும் பொலிஸ் தலைமையகத்துக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் நீதியானதும், நேர்மையானதுமான தேர்தலை நடத்துவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் பொலிஸார் எடுத்துள்ளனர். சட்டம், ஒழுங்கை மீறி நடப்பவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கவுள்ளனர்.

தேர்தலில் நடந்துகொள்ளவேண்டிய முறைபற்றி அனைத்து பொலிஸ் நிலையப்பொறுப்பதிகாரிகளுக்கும், உயரதிகாரிகளுக்கும் அறிவிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்துள்ள பொலிஸ் மா அதிபர் - சட்டம், ஒழுங்கை நிலைநாட்டத் தவறும் அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கூறினார்

### திடீரென...

மேற்கொண்டனர்.

அத்துடன், காகங்கள் இறந்தமைக்கான காரணத்தை கண்டறிவதற்காக - இறந்த காகத்தின் உடல்களை மருத்துவ பரிசோதனைக்கு அனுப்பிவைத்தனர்.

இதன்பின்னர், அந்தப்பகுதியில் விசாரணை மேற்கொண்டபோது பாடசாலை விடுதியில் தங்கியிருந்த ஆசிரியர் ஒருவர் எலிகளின்தொல்லை தாங்க முடியாது எலிப்பாசாணம் வைத்ததாகவும், பின்னர் அதனை வெளியில் வீசியதாகவும் அதனை காகங்கள் உட்கொண்டதாகவும் தெரியவந்தது.

### ஜெனிவா...

பொய்க்குற்றச்சாட்டெனவும் அவர் தெரிவித்தார்.

அதேபோன்று, அலரிமாளிகையில் அமைக்கப்பட்டிருந்த பேச்சுக்களை ஒருங்கிணைக்கும் அலுவலகத்துக்கு பல தடவை சென்றபோதிலும் கூட்டறிக்கை குறித்து நடைபெற்ற எந்தவொரு கலந்துரையாடலிலும் பங்கேற்கவில்லையெனவும் அவர் தெரிவித்தார்.

வீரவன்சவின் இந்தப் பதிலின் பின்னர் கட்சியின் நிறைவேற்று சபையும், அரசியல் சபையும் - ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சமாதான முயற்சிகளில் ஈடுபடும் விதம் குறித்து கடுமையான நிலைப்பாட்டையும், அதற்கு எதிரான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளது. (தே)

### வாகரை...

30 பேர் அடங்கிய குழு பங்கேற்றதாகத் விடுதலைப்புலிகள் தெரிவித்தனர்.

இந்தத் தாக்குதலையடுத்து விடுதலைப்புலிகள் பதில் தாக்குதலில் ஈடுபட்டதாகவும், இதையடுத்து இராணுவத்தினரும், துணை ஆயுதக்குழுவினரும் ஆயுதங்களைப்போட்டு விட்டு காயங்களுடன் தப்பியோடியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தப்பிச்சென்ற இவர்களால் கைவிடப்பட்ட ஆயுதங்கள் விடுதலைப்புலிகளால் மீட்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

### செக்...

பாதுகாப்பு ஆலோசகர் உடனான இந்தச் சந்திப்பு வழக்கத்துக்கு மாறானதாக இருந்ததாக கூறப்படுகின்றது.

### உயர்பாதுகாப்பு...

ஜனாதிபதிக்கும் தெரிவித்துள்ளனர்.

உயர் பாதுகாப்பு வலயங்கள் விலக்கப்படுமானால், பலாலி விமான விமானத்தளத்துக்கும், காரைநகர் கடற்படைத்ததளம் மற்றும் காங்கேசன்துறை துறைமுகம் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டு, படையினரின் வழாங்கல் விநியோகத்தை தடை செய்ய விடுதலைப்புலிகள் முயற்சிப்பரென அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதையடுத்து அதி உயர் பாதுகாப்பு வலயங்களினால் இடம் பெயர்ந்துள்ள குடும்பங்களை வேறொரு இடத்தில் குடியமர்த்தும் நடவடிக்கைகளை அரசாங்கம் ஏற்கனவே தொடங்கிவிட்டது என்றும் இதற்காக கண்ணிவெடியகற்றும் நடவடிக்கைகள் மீண்டும் தொடங்கியுள்ளோம் என்றும் பதில் அளிக்கலாம் என்றும் அரசதரப்பு முடிவு செய்துள்ளது.

### ஈ.பி.டி.பி...

இருந்தபோது 20பேர் சித்திரவதைகளால் கொல்லப்பட்டனர் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு-கிழக்குக்கு வெளியே தென்னிலங்கையில் மட்டும் பொலிஸ் சித்திரவதைகள் தொடர்பாக 634 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

அவசர காலச்சட்டத்தின் கீழ் 1,789 பேரை அரசாங்கம் கைது செய்துள்ளது.

கடந்த ஆண்டு 68படையினர் மற்றும் பொலிஸார், துணைஆயுதக்குழுவினர் உள்ளிட்ட 106பேர் விடுதலைப்புலிகளால் கொல்லப்பட்டிருக்கின்றனர் என்றும் அமெரிக்கா தனது அறிக்கையில் மேலும் குற்றம் சாட்டியுள்ளது.

### அமைச்சர்...

அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையே நடைபெற்று முடிந்த முதல் சுற்றுப் பேச்சில் கவனத்தில் எடுக்கப்பட்ட விடயங்கள் மற்றும் அடுத்த மாதம் நடைபெறவுள்ள பேச்சுவார்த்தை தொடர்பாகவும் அமைச்சர் தனது விஜயத்தின்போது இந்திய அதிகாரிகளுக்கு விளக்கவுள்ளார்.

சமாதான முயற்சிகளுக்கு இந்திய அரசின் ஆதரவை தொடர்ச்சியாகப் பெற்றுக்கொள்வதே இதன் நோக்கமெனத் தெரிவிக்கப்படுகிறது. (தே)

Apollo Hospitals
touching lives COLOMBO

யாழ்.மக்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்...!
விசேட மருத்துவ முகாம்

கொழும்பு அப்பலோ வைத்தியசாலை, மருத்துவ முகாம் ஒன்றினை இம்மாதம் 23, 24 ஆம் திகதிகளில் 272, ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள அப்பலோ வைத்தியசாலையின் தகவல் நிலையத்தில் நடத்தவுள்ளது. இம் மருத்துவ முகாமில் கீழ்க்காணும் நோய்களுக்கான வைத்திய நிபுணர்களை நீங்கள் சந்திக்கலாம்.

01. இருதய வைத்திய நிபுணர் (Cardiologist)
02. நரம்பியல் வைத்திய நிபுணர் (Neuro Physician)
03. குழந்தை மருத்துவ நிபுணர் (Paediatrics)
04. பொது வைத்திய நிபுணர் (General Physician)
05. சத்திரசிகிச்சை நிபுணர் (Surgeon)

மேற்படி மருத்துவ முகாமில் சிகிச்சை பெற விரும்பும் நோயாளர்கள் தங்களுக்கான முற்பதிவுகளை மேற்கொள்ள முடியும்.

மேலதிக விபரங்களுக்கு
அப்பலோ வைத்தியசாலை தகவல் நிலையம்,
272, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
T.P : 021 4590500
[C/5139]

ஆலை அதிபர்களே!
விவசாயப் பெருமக்களே!
எங்களிடம் நெல், மா, கோப்பி, ஈர அரிசி, உழுந்து அரைக்கும் இயந்திரங்கள், மோட்டார் டீசல் என்ஜின், ஜெனரேற்றர் (5KW, 3KW) ரேசர் வகைகள், பட்டி வகைகள் மற்றும் எல்லாவிதமான உதிரிப்பாகங்கள் எவையாயினும் நீங்கள் பெற்றுக்கொள்ள (பாடசாலை உபகரணங்கள், புத்தகங்கள்) நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்
சமுத்திரா றேட்ஸ் லிமிட்டட்
117, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T.P : 021 - 222 2938
[C/5089]

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 12.03.2006 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.